உ
சிவமயம்

# சைவநீதி
# SAIVANEETHI

மலர் 17 | ஜய ஆடி - புரட்டாதி | 2014 - July - Sep | இதழ் 4-5-6



# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 01 | சைவத்தமிழர்களாய் வாழ்வோம் | 01 |
| 02 | நாட்டுவளத்திற்கு மெருகூட்டும் சேக்கிழார் பாட்டு வளச்சுவை | 03 |
| 03 | இரண்டுகெட்டநிலை | 07 |
| 04 | SAIVA RELIGION | 11 |
| 05 | இந்திய ஆன்மீகப் பயணக் கட்டுரை | 13 |
| 06 | சைவநீதி பதினேழாவது ஆண்டுமலர் அறிமுகவிழா | 15 |
| 07 | சுந்தர மூர்த்தி நாயனார் புராணம் | 16 |
| 08 | உமாபதி சிவாசாரியாரும் சித்தாந்த அட்டகமும் | 18 |
| 09 | ஒன்பது தந்திரங்களாக வகுக்கப்பட்ட திருமந்திரம் | 21 |
| 10 | மணமக்கள் ஆல்போல் தளைத்து அறுகு போல்....... | 25 |
| 11 | வாரியாரின் ஒரு வரி பதில் | 27 |
| 12 | அகத்தியர் தேவாரத்திரட்டு உரைவிளக்கம் | 29 |
| 13 | சபாபதி நாவலர் வாழ்க்கைக் குறிப்பு | 34 |
| 14 | திருமந்திர விளக்கம் - அட்டாங்க யோகத்தில் இயமம் | 36 |
| 15 | நினைவில் கொள்வதற்குரிய வழிபாட்டு நாட்கள் | 37 |
| 16 | சைவப்புலவர் தேர்வு முடிவுகள் 2014 | 40 |


## சைவநீதி முத்திங்கள் இதழ்
### பெறுமதி விபரம்

தனிப்பிரதி ரூபா 50.00 ஆண்டொன்றுக்கு ரூபா 300.00 ஏனைய நாடுகளில் ஆண்டொன்றுக்கு ஸ்ரேலிங் பவுண் 10 அல்லது US $ 15

சைவநீதியின் வளர்ச்சியில் எங்கள் பங்களிப்பு என்ன என்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்திப்போமாக.

**சந்தா அனுப்ப வேண்டிய முகவரி :**


C. Navaneethakumar
No. 4A, 1st Lane, Ratmalana.
Tel : 077 9008286

உ
சிவமயம்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சைவநீதி

மலர் 17 ஜய ஆடி, ஆவணி, புரட்டாதி சைவசமய வளர்ச்சி கருதி வெளிவரும் இதழ் 4-5-6

**தொடக்குனர் :**
கலாபூஷணம்,
ஞானசிரோமணி,
சைவப்புலவர்மணி,
வித்துவான்
**திரு. வ. செல்லையா**

**ஆலோசகர்**
கலாபூஷணம்,
சைவப்புலவர்
**திரு. சு. செல்லத்துரை**

**ஆசிரியர்**
சைவப்புலவர்
**திரு. செ. நவநீதகுமார்**

**விநியோகம்**
சித்தாந்தரத்தினம்
**திருமதி. பத்மினி ராஜேந்திரா**

**வெளியிடுவோர்**
திருவாவடுதுறை ஆதீனம்
சைவசித்தாந்தப்
பயிற்சி மையத்தினர்
- கொழும்பு

No. 4A, 1St Lane,
Ratmalana.
Tel : 077 9008286

## சைவத்தமிழர்களாய் வாழ்வோம்

நாம் சைவசமயத்தில் தமிழ்ப் பண்பாட்டில் வந்து பிறந்திருக்கின்றோம். எமக்கு இந்தப் பிறப்பு எப்படிக்கிடைத்தது என்பதைச் சிந்தித்தல் வேண்டும். முற்பிறப்புக்களில் நாம் செய்த புண்ணியப் பயனாகத்தான் இப்பிறப்புக் கிடைத்துள்ளது. இந்த உண்மையை மெய்கண்ட சாத்திரமாகிய சிவஞானசித்தியார்

**நரர்பயில் தேசந்தன்னில் நான்மறைபயிலா நாட்டில்**
**விரவுதல் ஒழிந்து தோன்றல் மிக்கபுண்ணியத் தானாகும்**
**ஊழ்பெறல் அரிது, சால உயர்சிவஞானத்தாலே**
**போழ்இள மதியினானைப் போற்றுவர் அருள்பெற்றாரே.**

என்றுணர்த்துகின்றது. அரியநல்வினைப் பேற்றால் சைவசமயத்தில் பிறந்தோர் மிக உயர்ந்த சிவ ஞானம் பெற்றுப் பிறைமதி சூடியசிவனை வழிபட்டு இருப்போர் அருள்மிகப் பெற்றவராம்.

தந்தையும் தாயும் தான் .எமக்கு இந்த உடலையும் உணர்வையும் வாழ்வையும் தந்தவர் கள். ஆதலால் நாம் பெற்றாரை இருகண்கள் போலப் பாதுகாத்துப் போற்றுதல் வேண்டும். அதேபோன்று எம்முடைய பிறவியில் தந்தைதாய் இருப்பது எமது சைவசமயம், தாயாய் இருப்பது எமது தமிழ்ப்பண்பாடு. இவை இரண்டும் எமது

இரு கண்கள் போலப் போற்றப்பட வேண்டியவை. பிறப்பால் வந்த இந்தப் பெருமையை நாம் இழந்துவிடக்கூடாது. பெற்றாரைப் போற்றாத பிள்ளை வீண்பிள்ளை என்று பழிக்கப்படும். அதே போல் நமது சைவநெறியையும் தமிழ்ப்பண் பாட்டையும் போற்றி வாழ வேண்டும் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

நான் யார் என்றால் இன்னாரது பிள்ளை என்பது போல நான் யார் என்பதற்கு அடையாளம் நான் சைவன்; நான் தமிழன் என்பதேயாகும். எண்ணில்லாத சமயங்களும் மொழிகளும் உள்ள இந்த உலகில் எமது அடையாளம் இதுதான். இந்த அடையாளத்தை இழந்துவிட்டால் எமது இருப்பு இல்லாமற் போய்விடும்.

பெற்றாரின் மரபணுவின் பண்புடைய நாம் தந்தைபோல் அறிவும் தாய்போல் இயல்பும் உடையவர்களாயிருத்தல் போல சைவத்தமிழ் அறிவும் பண்பாடும் உடையவர்களாயிருத்தல் வேண்டும் என்பது வெள்ளிடை.

தன் சமயத்தை அறியாதிருத்தலோ அன்றி வேறு சமயத்திற்கு மாறு தலோ இழிவான செயல். யாரும் தன் பெற்றாரை அறியாமலோ பெற்றாரை வேறொருவர் என்று மாற்றிக் கொள்வதோ நடைபெறக் கூடாத, நடைபெற முடியாத செயல். அதுபோல நாம் நம் சமயத்தை தமிழ்ப் பண்பாட்டை அறியாமலோ அல்லது வேறு சமயத்தை மொழியைப் பின்பற்றுதலோ இழிவான செயலாகும்.

எங்கள் தமிழ் மொழியில் எங்கள் சமயமாகிய சைவம் பற்றிய மூல நூல்களாகச் சாத்திரங்களான மெய்கண்ட சாத்திரங்களும், தோத்திரங்களான சைவத்திருமுறைகளும் இருக்கின்றன. அவற்றைப் படித்துணர்ந்து சைவர்களாகத் தமிழர்களாகத் தலை நிமிர்ந்து வாழ்வோம்.

முன்னைப்புண்ணியப் பேறாகக்கிடைத்த இப்பிறவியின் பயனைப் பெறுவோம். அந்நிய மொழிக்கோ, அந்நிய சமயக் கொள்கை களுக்கோ அடிமைப்படாமல் சைவர்களாகத் தமிழர்களாக வாழ்வோம்.

# நாட்டு வளத்திற்கு மெருகூட்டும் சேக்கிழார் பாட்டு வளச் சுவை:

சிவ சண்முகவடிவேல்

**சைவநீதி தொடங்கிய காலமுதல் இன்றுவரை கட்டுரைகளை எழுதி வந்தவரும், திருமுறைச் செல்வரும், புராணபடன வித்தகரும், எந்நேரமும் சிவசிந்தனையுடனும், சிவவேடத்துடனும் வாழ்ந்தவருமான சிவனடியார் சிவ. சண்முகவடிவேல் அவர்கள் இறையடி சேர்ந்த செய்தியறிந்து அவர் திருவடிகளை நினைந்து தொழுகின்றோம்.**

தில்லைக் கூத்தர் "உலகெலாம்" என்று அசரீரி வாக்காக அடி எடுத்துக் கொடுத்தார். அந்த வித்தை முளையாகக் கொண்டு சேக்கிழார் திருத்தொண்டர் என்னும் கவின்மிகு, காலத்தால் அழிவில்லாத கலைக் கோயிலைச் சைவ உலகிற்குக் கட்டித் தந்தார். அறுபத்து மூன்று தனியடியார்களும் ஒன்பது தொகை அடியார்களுமாக எழுபத்திரண்டு அடியவர்களால் நடப்பது பெரியபுராண காவியம்.

அடியவர்கள் ஓரூரவர் அல்லர்; ஒரு குலத்தவர் அல்லர். ஒரு தொண்டில் தம்மை அர்ப்பணித்தவர்கள் அல்லர். பற்பல ஊர்களும் பலவகை நாடுகளையும் சேர்ந்தவர்களாதலால் பலவகை இயற்கை வளங்களைப் பெரியபுராணத்தில் இயம்பி உள்ளார். கற்பனாலங் காரம், கவின் காட்டும் நாட்டுவளம் பாடல்களைப் படிக்கும் தோறும் பயனுள்ள இன்பச் சுவையைப் பயப்பது. தமிழின்பம் இது தானோ என்று வியப்படையச் செய்யும் செய்யுட்கள் அவை. கால இடவகை கருதி ஒரு சில பாடல்களை உதாரணத்திற்காக இங்கு எடுத்து இயம்புகின்றோம்.

**தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத் தூறு மறிவு - (6)**

என்னும் தெய்வப் புலவர் திருவள்ளுவர் திருவாக்கு மெய்ப்பிக்கும் எடுத்துக் காட்டுப் போலத் திகழ்வது அருண்மொழித் தேவருடைய அமுதம் போன்ற பாடல்கள்.

**கரும்பல்ல நெல்லென்னக் கமுகல்ல கரும்பென்ன**
**சரும்பல்லி குடைநீலத் துகளல்ல பகலெல்லாம்**
**அரும்பல்ல முலையென்ன அமுதல்ல மொழியென்ன**
**வரும்பல்லா யிரங்கடைசி மடந்தையர்கள் வயலெல்லாம்.**

இது திருத்தொண்டர் புராண அறுபத்தைந்தாம் பாடல். திருநாட்டுச் சிறப்பு பதினைந்தாம் பாடல்.

பார்ப்பவர்கள் இவை கரும்பல்ல. நெல்பயிர் என்பார்கள். இவை கமுகமரங்கள் அல்ல. கரும்பேயாகும் என்று சொல்லும் தரமாக வயல்விளை பயிர்கள் பணைத்துச் செழித்து ஓங்கிப் பார்ப்பவர் களுடைய மனத்தை மயக்குகின்றன. கண்ணைக் கவருகின்றன.

வண்டுகள் குடைதலினால் நீலோற்பமலரின் துகள் எங்கும் பரக்கின் றன, அதனால் பகற்காலம் எல்லாம் இராக்காலம் போலாகின்றன. இவை மலரின் அரும்புகள் அல்ல. அரும்பை ஒத்த தனங்களே யாகும் என்று மயக்கத்தை வருவிக்கின்றன. இவை அமுதம் அல்ல. அமுதம் போன்ற வாய்மொழியாகும் என்று சொல்லத்தக்க இலக்கண மொழி இயம்பி பல்லாயிரக்கணக்கான உழத்தியர்கள் வயலில் கடமை செய்கின்றார்கள்.

இவ்வாறு வயல்வளம் அறியாத ஒருவனும் வயல்வளம் அறிந்த ஒருவனுமாக இயற்கையை மாறாகக் கற்பனைபண்ணிக் கதைப் பதைத் தடுது உள்ளவாறு எடுத்து இயம்பும் தன்மையாகவும் அமைந்துள்ள பாடற்சுவை பகரும் தரமன்று.

சோறுடைத்தாய சோழநாட்டில் மருதநிலத்திற்கும் குறைவு ஏது! மருதநிலம் வயலும் வயல் சார்ந்த நிலப் பரப்பும் ஆகும். வயல் சார்ந்த நிலம் எங்கும் நெல் முதலிய தானியப் பயிர் வளர்ப்புக்குக் குறைவிருக்காது.

உழவர்களைப் போல உழத்தியர்க்கும் வயலில் நாளும் ஏதாயினும் ஒரு தொழிலுக்குக் குறைவிருக்காது. உழத்தியர்கள் வேலை செய்யும் பொருட்டு வயலுக்கு வரும் பொழுதெல்லாம் தமது சிறு மகளிரையும் பாதுகாவலுக்காக உடனாக அழைத்து வருவார்கள்.

தாய்மார்கள் வயல் வேலையில் ஈடுபட்டிருக்கும் பொழுதில் சிறுமியர்கள் மண் விளையாட்டில் அதிக கவனஞ் செலுத்துவார்கள்.

வயல் வரம்புகளில் சிறுமியர் ஆயம் விளையாடும் பொழுதில் இல்லத்திலிருந்துதானா விளையாட்டுப் பொருட்களை எடுத்துச் செல்வார்கள்? இல்லை, வயலில் கிடைக்கும் பொருட்களைக் கொண்டும் அல்லது சேகரிக்கத்தக்க பொருட்களைத் தேடியும் சிறுமியர் ஆயம் தங்கள் மண் விளையாட்டில் மனம் கொள்வார்கள். மண்ணினால் சோறு கறி சமைப்பார்கள். அது அவர்களுக்கு மிகப் பிரியமான விளையாடல். சோறு சமைப்பதற்குப் பானை வேண்டும். பானைக்கு எங்கே போவது?

கயல்மீன்கள் பாயும் தடாகக் கரையில் கிடக்கும் நத்தை ஓடுகளை தேடி எடுத்துக் கொள்வார்கள். நத்தை ஓட்டைப் பானையாகப் பாவிப்பார்கள். பானைக்குத் தண்ணீர் வேண்டுமே! பூக்கள் பிளிற்றும் தேனைத் தண்ணீராக ஓட்டுப் பானையில் ஊற்றுவார்கள். பானையும் தண்ணீரும் இருந்தால் போதுமா? அரிசி வேண்டுமே. சங்குகள் ஈன்ற முத்துக்களைப் புத்தரிசியாகப் புதுப்பானையில் இடுவார்கள்.

அரிசிப் பானையை ஏற்றுவதற்கு அடுப்புப்பிரதானம்..... அக்கம் பக்கங்களில் கிடக்கும் ஆமை ஓடுகளைக் கொண்டு வந்து அடுப்புக் கல்லாக அணைப்பார்கள். அரிசிப் பானையை அடுப்புக் கல்லில் ஏற்றுவார்கள். அடுப்பு எரியவில்லை என்றால் அரிசி அவியாது, வெப்பத்தை வருவிப்பதற்கு விறகு வேண்டும். அதற்கு ஒருவழி கண்டு பிடித்தார்கள். செவ்வாம்பல் மலர்களைத் தீயாகப் பாவனை பண்ணி அடுப்பூதுவார்கள். இவ்வாறாகிய செயற்பாடுகளே வயல் வரம்பு வாய்க்கால் எங்கும் நிகழும். கண்ணுமக்கியதும் மனத்தைக் கவரும் காட்சியாகும்.

அருண்மொழித்தேவர் அழகான செந்தமிழ்ச் சொற்கட்டிகளால் எடுக்கும் கலைக் கோயிலைக் கண்களிப்பக் காணுங்கள்.

**கயல்பாய்பைந் தடநந்தூன் கழிந்தபெருங் கருங்குழிசி**
**வியல்வாய்வெள் வளைத்தரள மலர்வேரி யுலைப்பெய்தங்**
**கயலாமை யடுப்பேற்றியரக்காம்பல் நெருப்பூதும்**
**வயல்மாதர் சிறுமகளிர் விளையாட்டு வரம்பெல்லாம்.** (66)

கழைபொருந்திய கரும்புகள் எல்லாம் காடாகக் காணப்படுகின்றன. சோலைகளில் சிறுகிளை சிறு தளிர் எங்கும் கருங்குவளை மலர்கள் அரும்பா நிற்பன. நெருங்கிய பயிர்கள் விளைச்சலைத் தரும் வயல் எங்கும் அன்னப் பறவைகள் கிடப்பன. தடாகக் கரை எங்கும் அன்னப் பறவைகள். குளங்கள் எல்லாம் கடல் போன்ற விசாலமுடையன. எந்த நாடும் எந்த நன்மையினாலும் சோழ நாட்டிற்கு நிகராக மாட்டாது.

பாடலைப் படித்துப் பாருங்கள்:-

**காடெல்லாங் கழைக்கரும்பு காவெல்லாங் குழைக்கரும்பு**
**மாடெல்லாங் கருங்குவளை வயலெல்லாம் நெருங்குவளை**
**கோடெல்லா மடவன்னங் குளமெல்லாங் கடலன்ன**
**நாடெல்லா நீர்நாடு தனையொவ்வா நலமெல்லாம்.** (67)

பக்கங்கள் பார்க்கும் இடம் எல்லாம் யானைக்கன்றுகள். எங்கும் பார்த்தாலும் அலரும் மலரின் வண்டுகள் குடைவன. அழகிய ஆகங்கள் எங்கும் பண்ணிசை பயின்ற வண்ணம் உள்ளன. இல்லங்கள் எங்கும் பெண்கள் பயிலும் அம்மனை ஆடல். எங்கே திரும்பினாலும் கொடிகளின் அசைவு. திரும்பும் திசை எங்கும் பலவகையும் நிறைந்த சங்க நிதி பதுமநிதி. திரும்பும் இடம் எங்கும் இதழ் செறிந்த மலர் மாலைகள். எங்கு திரும்பினாலும் காதலர் காதலிகள் தொடர்வரிசை எங்கும்.

பரவசமூட்டும் ஓசைப் பாடலை உற்று உணருங்கள்:-

**மாடுபோ தகங்க ளெங்கும்**
**வண்டுபோ தகங்க ளெங்கும்**
**பாடும்மம் மனைக ளெங்கும்**
**பயிலுமம் மனைக ளெங்கும்**
**நீடுகே தனங்க ளெங்கும்**
**நிதிகே தனங்க ளெங்கும்**
**தோடுசூழ் மாலை யெங்கும்**
**துணைவர்சூழ் மாலை யெங்கும் (83)**

# இரண்டுகெட்டநிலை

பேரறிஞர் முருகவே பரமநாதன்

தமிழ்மொழி நடையின் அற்புதம் பலதிறத்தன. பழமொழி தொடர் மொழி, உவமச் சொற்றொடர், மரபுச் சொற்றொடர், அடுக்குச் சொற்றொடர் அவற்றுட்சில கவிஞர்கள், புலவர்கள், விகடகவிகள், நகைச்சுவை நடிகர்கள், ஏன் சிந்தனையாளர் இத்துறையை எடுத்தாள்வர், விற்பனராய் இருப்பர். கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசையென்றால் என்ன பொருள். ஒடியற் கூழ் குடிக்கவேண்டு மாயின் வாயை மறைக்கும் நீண்ட மீசை உடையவர்க்கு அது பொருந்தாது. அந்த நீண்ட மீசை ஒடியற் கூழ் குடிப்பதற்குத் தடையாய் இருக்கும். அரிகண்ட மாயும் இருக்கும். ஒன்றில் மீசையை வெட்டவேண்டும் அன்றேல் கூழ் குடிப்பதைக் கைவிட வேண்டும். மழித்தலும் நீட்டலும் வேண்டா, உலகம் பழித்தது ஒழித்துவிடின் இதெல்லாம் கவர்பட்ட மனத்தின் தொழிற்பாடாம், இரண்டு தோணியிற் கால்வைத்தல், இரட்டைக்குழற் துப்பாக்கி போல் வேறுபட்ட குரலிற் பேசுதல், பெரியவீடும் சின்னவீடும் சொந்தப் புருஷனும் சோரநாயகனும் போன்ற நடைமுறைகள் இரட்டைமனப் போக்காம். இருமன வரைவின் மகளிரை இருமனப்பெண்டிர் என (குறள் எண் 920) வள்ளுவம் வர்ணிக்கிறது. ஒருவனைப்பற்றி ஓரகத்திரு என்பது மூதாட்டிவாக்கு. இ∴து ஒருவனுக்கு ஒருத்தியென்ற உண்மையையும். ஒன்றே தெய்வமென்ற கோட்பாட்டையும் உலகுக்குத்துலாம் பரப்படுத்துகின்றது. மங்கையர், சிறப்பாகக் கற்புப்பற்றிய விளக்கத்தில் ஒரு கணவனுடன் இன்பம் துய்ப்பவள் இரண்டாவது ஆடவனோடு மெய்யுறவு (உடற்சேர்க்கை) செய்வதும், நூற்றிரண்டாவது ஆனோடு இன்பம் நுகர்வதும் ஒன்றுதான். இதை நிறையென்று (குறள் 57) வள்ளுவர் வரையறை செய்துள்ளார். பாரதி கற்பென்று பேசவந்தால் ஆண் பெண் இருபாலார்க்கும் அ∴து பொது என்றார். தாயுமானவரும் குலசேகர ஆழ்வாரும் ஒரு மேதகு கற்பு நெறியை மேன்மைமிகு கடவுள் கோட்பாட்டோடு இணைத்துப் பேசுகின்றனர். நிறை நெஞ்சைக்கற்பு நெறியில் நிறுத்தல் கற்பெனப்படுவது சொல் திறம்பாமை.

**கற்புறு சிந்தை மாதர்**
**கணவரை அன்றி வேறுஓர்**
**இற்புறத் தவரை நாடார்**
**யாங்களும் இன்ப வாழ்வும்**
**தற்பொறி ஆக நல்கும்**
**தலைவநின் ஆவதுஓர் தெய்வம்**
**பொற்புறக் கருதோம் கண்டாய்**
**பூரணானந்த வாழ்வே** (36 கற்புறுசிந்தை)

பொருள் - கற்பானது மிகுந்த மனத்தினையுடைய பெண்கள் தமது கணவரை விரும்புதலன்றி, அன்னியமாகிய, ஒரு அயல் வீட்டாரை விரும்பார் (நாடார்) அஃதே போன்று நாங்களும் சுக வாழ்க்கையையும் தன் செல்வமாகத் தந்தருளுகின்ற முதல்வனே! உன்னையன்றி மற்றொரு தெய்வத்தை, பொற்புற நாடோம் பரிபூரணானந்த இன்ப வாழ்வை உடையவனே.

இந்துக்கள் என்ற பெயரில் ஆயிரம் தெய்வ வணக்கத்தில் ஈடுபடுவோர் இதை நன்கு சிந்தித்தல் சமயக் கற்பாம். உடன்பாடற்ற ஐயப்ப, அனுமார் வணக்கம் என்று சிலராற் புகுத்தப்பட்டவையே. இந்த அந்நிய பக்தியை வெறுப்பார். குலசேகர ஆழ்வார்.

**கண்டாரிகழ் வனவே**
**காதலன்றான் செய்திடினும்**
**தொண்டானை யல்லா**
**லறியாக் குலமகள்போல்**
**விண்போய் மதின்புடைசூழ்**
**விற்றுவக்கோட் டம்மாநீ**
**கொண்டாளா யாகிலுமுன்**
**குரைகழலே கூறுவனே!**

பெருமாள் திருமொழி 5:4

விற்றுவக்கொடு ஒரு திருமால் தலம் இப்பாசுரப் பொருள் வெளிப் படை குலமகட்கழகு கொழுநனைத் தொழுதல் (ஔவை) சகோதர சமயங்களை பார்த்தாவது நம் தடத்தை, நடத்தையை நோத்தியாகவும், நிதானமாகவும் மதிப்போமாக.

இந்த இரண்டு கெட்ட நிலை - இரண்டும் கெட்ட நிலை என்றும் பாவிப்பர். ஒரு மனம் நினைக்க ஒரு மனம் மறைக்கவா ஆன்மீகத்தில் இரட்டைகள் என்ற வழக்காறு இருப்பதை நாம் அறிவோம். இன்பம் துன்பம், நன்மை தீமை, வறுமை செம்மை, நன்று தீது, அறம் மறம், பாவம் புண்ணியம், ஏற்றம் இறக்கம், பிறப்பு இறப்பு, சுபம் அசுபம், நீதி அநீதி, தர்மம் அதர்மம், ஆக்கம் அழிவு, கேடு ஆக்கம், போல்வன இரட்டைகள். இவற்றின் அனுபவிப்புக்களும் மரக்கிளை போல் கவடு விட்டு பிரிந்துளவாகும். இறைபணிக்கு இந்த இரண்டாட்டம் சாபம் இருக்கவே இருக்காது இந்த இரண்டற்ற நிலை வேண்டும் ஒன்றாக காண்பதே காட்சி புலன்வழி மனம் அலையாமல் இருப்பதே தெளிந்த மனம். இஃது உடையோரே தீர ஞானிகள், வீரத் துறவிகள். இந்த நுண்பொருளை மணிவாசகப் பெருந்தகை தன்னையே (கதா) பாத்திரனாக்கி நம்மையும் நெறிப்படுத்துகின்றார்.

**சிந்தனை நின்றனக் காக்கி நாயினேன்றன்**
**கண்ணிணை நின்றிருப்பாதப் போதுக்காக்கி**
**வந்தனையுமம் மலர்க்கேயாக்கி வாக்குன்**
**மணிவார்த்தைக் காக்கியைம் புலன்களார**
**வந்தெனை யாட்கொண்டுள்ளே புகுந்தவிச்சை**
**மாலமுதப் பெருங்கடலே மலையே உன்னைத்**
**தந்தனை செந்தாமரைக் காடனைய மேனித்**
**தனிச்சுடரே யிரண்டுமிலித் தனியனேற்கே**

திருச்சதகம் 26.

போது – மலர், பூ, ஆர – நுகர, விச்சை – வியக்கத்தக்க, மணிவார்த்தை – மணிமணியான சொற்கள், அழகிய வார்த்தைகள், மால – விருப்பம், தாமரைக் காடனைய மேனி – சர்வவியாபகி, செக்கச் சிவந்த செந்தாமரை போன்ற அழகிய மேனி (திருமேனி) இரண்டுமிலி - இரண்டுங்கெட்ட நிலை

பேரமிர்தப் பெருங்கடலே, மலைபோன்றவனே, தாமரைப் பூவனம் போன்ற மேனியனே சுயம் விளைந்த (தனி – ஒப்பற்ற) சோதியே என்மனசை உனக்கே யாக்கி, இரு திருவிழிகளும் நினது அழகிய திருவடிகளுக்கு ஆக்கி, என் பேச்சுக்கள் நின் பெருமையை (மகிமையை, புகழை) பேசுவதற்காகவே ஆக்கி ஐம்புலன்களும் நின்னை ஆர அனுபவிப்பதற்கே ஆக்கி கரணங்களை எப்படி பயன்படுத்துவ தென்றறியாத இரண்டும் கெட்ட நிலையில் வாழும் எனக்கு நின்னை யளித்தேனே என்ன பெருமை அந்தோ நின் போக்கே அடியாரை வாழவைக்கும் போக்கு என்பது இப் பாட்டின் பொருள் ஆகும்.

கிராமிய வழக்கிலும் சான்றோர் வழக்கிலும் பயின்று வரும் இரண்டும் கெட்ட நிலைப்பாட்டை ஒரு உதாரண முகத்தாற் சிந்திப்போம்.

நம் ஆலயங்களிலே புராணபடனம் (கந்தபுராணம்) நடப்பது பழமையான மரபாம். யாழ்ப்பாண கலாசாரம் - கந்தபுராண கலா சாரமே என்ற முடிபை காசிவாசி செந்திநாதையரில் இருந்து நேற்று வாழ்ந்த இலக்கிய கலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் வரை சொல்லிப் போயினர். எனவே அக்கோயிலைச் சூழவுள்ள சைவப் பெருங்குடி மக்கள் மத்தியில் ஒரு பழமொழி வழங்கி வருகிறது. புராணம் கேட்டபாடும் இல்லை மச்சம் சாப்பிட்டபாடும் இல்லை என புனிதமான புராணப் படிப்பை கேட்கும் விரதிகள் புலாலுண்ணாமையை மேற்கொண்டு விரதம் நோற்றார்

கள். ஆனால் நோக்கம் பூர்த்தியாகவில்லை இரண்டுமே நடை முறைப்படுத்த முடியவில்லை. இரண்டும் கெட்ட இந்த வழக்காற்றை இன்னும் விரிக்கத் தேவையில்லை; ஆழமாகச் சிந்திப்போம்; சிந்தியுங்கள்.

இந்த அருமையான பொருளமைவை மணிவாசகர் காலத்துக்கு பன்னூறு ஆண்டுகட்கு முற்பட்ட நாவுக்கரசர் திருவாக்கிலும் காணலாம்.

**எவரேனுந் தாமாக விலாடத் திட்ட**
**திருநீறும் சாதனமும் கண்டா லுன்னி**
**உவராதே யவரவரைக் கண்டபோது**
**உகந்தடிமை திறநினைந்தங் குவந்துநோக்கி**
**யிவர்தேவ ரவர்தேவ ரென்று சொல்லி**
**யிரண்டாட்டா தொழிந்தீசன் திறம்பேணிக்**
**கவராதே தொழுமடியார் நெஞ்சினுள்ளே**
**கன்றாப்பூர் நடுதறியை காணவாமே**

திருமுறை 6:61,3

கன்றுக்குட்டியை கட்டி வைக்கும் (தறியில்) கட்டையில் இருந்து இறைவன் தோன்றி வழிபாடு ஏற்ற தலம் கண்றாப்பு கோயில் - இலாடம் - நெற்றி.

திருவாசகத்தில் வந்த சிந்தனை, ஒரு பாடலும், அரசர் பாடிய ஒரு பாட்டும் போதும் நாம் சைவசமயிகளாக நடக்க ஆண்டாண்டு தோறும் முற்றோதியென், சிந்திப்போம் செயற்படுத்துவோம் சைவர்க ளே பிற தெய்வம் பேணாதீர்.

வெளிநாடுகளில் வதியும் சைவர்களும் இந்துக்களும் இவர்கள் சைவர்களோ கிறீத்தவர்களோ என்னும் பாகுபாடு பண்ணமுடியாமல் வாழ்கின்றனர். ஜனவரி முதற் தேதி டிசம்பர் இருபத்தைந்தை கொண்டாடுவர். இவர்கட்கு சைவப்புதுவருடம் சித்திரை முதற்தேதி என்று புரியவில்லை. ஜனவரியே புத்தாண்டு எனக் கொண்டாடுவர். இதற்கு ஆதரவாக ஆலயங்களும் இயங்குகின்றன. இரண்டும் கெட்ட நிலைக்கு ஊடகங்களும் தொழிற்படுகின்றன. ஆக நின்று நிதானித்து நம் அடிச்சுவடுகளை நோக்கி நேர்த்தியாய் ஆழமாய் பதிப்போமாக.

Continuation of the journal.......

# SAIVA RELIGION

**Auther : S. Sivapathasundaram B.A.**
**English Translation : Sidthantharatnam**
**Dr. K. Ganesalingam**

## CH. 3 - BONDAGES

When the sthula sarira leaves , (1) some souls remain with a different sarira, a distorted form of sukshma sarira, experiencing happiness or sorrow. When experiencing happiness the sukshma sarira becomes boothasaara sarira; when experiencing sorrow it becomes yaathanaa sarira. Souls which did punniyaam (virtuous deeds) experience happiness. Souls which did paavam (evil deeds) experience sorrow. The state of experiencing happiness is called swargam (swargaa). The state of experiencing sorrow is called narakam (naraka). After gaining experience in this manner, the soul takes a birth. The sthula sarira required for that birth is taken depending on the sukshma sarira. If we cut down a wood apple tree, then another tree grows up from its root. Similarly when the sthula sarira perishes, different sthula body comes depending on the sukshma body. (2) Some souls remain dormant and take birth. (3) Some souls even take birth immediately.

Note: It may be asked, 'can a soul which took the human birth, take the body of an animal'? Some are of the opinion that it cannot take. It is an incorrect view. The reason given by them is, "The soul improves in every birth. It is indicated by the improvement in the bodies it took. Animal body is not an improvement from human body. Hence the soul which took the human body cannot take an animal body'. The defect in their reasoning is "Improvement of the soul is indicated by the improvement of the body". There is no connection between the improvement of the body and that of the soul. Improvement of the soul is indicated by its quality. Compared to a brutal and evil man, a cow with good quality is a higher soul. Even in human beings, there are people with good physic and intelligence

living as evil people. Many with fragile body and less intelligence are living with good qualities. Those with good qualities are higher souls. Hence it is wrong to consider a soul to be low because of a defective body. A soul which took a human body can again take any kind of body. Because of it Appar Swamikal stated as follows.

'புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா வுன்னடி யென்மனத்தே
வழுவா திருக்க வரம்தரல் வேண்டுமிவ் வையகத்தே
தொழுவார்க் கிரங்கி யிருந்தருள் செய்பா திரிப்புலியூர்ச்
செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடை மேல்வைத்த தீவண்ணனே'

'Oh! The Virtuous One! Even if I am born as a worm, give me the assurance that in this world your sacred feet will be always in my thought.

Oh! The One carrying the pure watered Ganga on the red matted hair, Residing at Thiruppathiripuliyoor in the form of fire, showing grace to those who worship Him and blessing them!'

Body alone is not adequate for us to do karma. For this physical body to exist the world is requried; for it to be sustained, food items are requried. For the anavam to act and create desire etc., other objects are requried. It requries our bodies, the worlds and innumerable worldly objects.

The bodies, words and inanimate objects come from an entity called Maya. Maya is a subtle entity. Like the air being subtler than water, space is subtler than air. Like the space is being subtler than air, Maya is subtler than space. Maya is classified as of three kinds, viz., Suddha maya, Suddhasuddha maya and Asuddha maya. these are called respectively as Sivatatva, Vidyatatva and Athmatatva. When classified as of two kinds, Suddhasuddha Maya is included in Asudha maya.

Continued ......

சென்ற இதழின் தொடர்ச்சி.........

# இந்திய ஆன்மீகப் பயணக் கட்டுரை

திருமுறைநெறிச்செல்வர்
திருமதி. கேசினி கோணேஸ்வரன்

**கைலாசநாதர் திருக்கோயில் (திங்களூர்)**

திங்கள் (சந்திரன்) ஸ்தலம் சென்றோம். இக் கோயிலுக்கு கைலாச நாதர் திருக்கோயில் என்று பெயர். இறைவன் - கைலாசநாதர், இறைவி - பெரியநாயகி, தீர்த்தம் - சந்திரபுஷ்கரணி. இங்கு நவக்கிரகங்களில் ஒன்றான சந்திரனுக்கு தனியான பரிவாரக் கோயில் உண்டு. அதற்கு சிறப்பான பூசை வழிபாடுகள் நடைபெறு கின்றன. இங்கு அப்பூதியடிகள் என்னும் சிவனடியார் வாழ்ந்தார். அவருடைய மகன் நாகம் தீண்டி இறந்தபோது திருநாவுக்கரசு நாயனார் உடம்பை இக் கோயிலுக்கு கொண்டு வந்து "ஒன்றுகொலாமவர்" என்று தொடங்கும் தேவாரப் பதிகத்தைப் பாடி அவரை உயிர்பெற்றெழச் செய்தார். திங்களூரில் எந்த நாகம் யாரைத் தீண்டினாலும் கடிபட்டவருக்கு விசம் ஏறாதாம். இங்கு பங்குனிமாத பௌர்ணமியன்று சந்திரனின் ஒளி இறைவனின் திருமேனியைத் தழுவி நிற்பதைக் காணலாம்.

**திருவிடைமருதூர்**

திங்களூரைத் தரிசித்தபின் திருவிடைமருதூர் ஆலயம் நோக்கிப் பயணமானோம். திருவிடைமருதூர் ஆலயத்திலுள்ள லிங்கம் சுயம்புவாய்த் தோன்றியது. இறைவன் - மகாலிங்கேசுவரர், இறைவி - பிருகச்சுந்தர குஜாம்பிகை, பெருநலமுலையம்மை. இக் கோயில் மீது அப்பர் 5 பதிகங்களும் சம்பந்தர் 5 பதிகங்களும் சுந்தரர் ஒரு பதிகமும் பாடியுள்ளனர். இது 1200 வருடங்கள் பழைமை வாய்ந்த ஆலயம். தலவிருட்சம் - மருதமரம். இங்கு தேரோடும் நான்கு வீதிகளின் கோடிகளிலும் விஸ்வநாதர், ஆத்மநாதர், ரிஷிபுரீஸ்வரர், சொக்கநாதர் ஆகியோருக்கு 4 சிவாலயங்களும் நடுவில் மகாலிங்கப் பெருமானும் இருப்பதால் இத்தலம் பஞ்சலிங்கத் தலமென்றும் அழைக்கப்படுகின்றது.

இக் கோவிலில் 3 பிரகாரங்கள் உண்டு 1) அஸ்வமேதப் பிரகாரம் - வெளிப் பிரகாரம் இதனை வலம்வந்தால் அஸ்வமேத யாகம் செய்த பலன் கிடைக்கும். 2) கொடுமுடிப் பிரகாரம் 2வது பிரகாரம் இதனை வலம்வந்தால் கைலாச மலையை வலம்வருவதற்கு சமன் என்பர். 3) பிரணவப் பிரகாரம் - உட்பிரகாரம். இதனை வலம்வந்தால் மோட்சம் கிடைக்கும்.

வரகுண பாண்டியனின் பிரம்மகத்தி தோஷம் நீங்கிய தலம் இது. பக்தர்கள் கிழக்கு வாயில்கள் ஊடாக உள்ளே சென்று மேற்கிலுள்ள அம்மன் சந்நிதி கோபுர வாயில் வழியாக வெளியே செல்லும் முறை உள்ளது. இக்கோயிலில் 32 தீர்த்தங்கள் உள்ளன. காருண்யாம்ருத தீர்த்தம், கலியாண தீர்த்தம் எனப்படும் பூச தீர்த்தமும் முக்கியமானவை தைப்பூசத்தன்று இத் தீர்த்தத்தில் நீராடுபவர்கள் பாவவிமோசனம் பெறுவர். பட்டினத்தார் பத்ரகிரியார் வழிபட்ட தலம். அருணகிரிநாதர் திருப்புகழ் பாடியுள்ளார். பட்டினத்தார் இத்தலம் குறித்து நிறைய பாடல்கள் பாடியுள்ளார். இத்தலத்திலுள்ள மூகாம்பிகை பிரசித்தி பெற்ற தெய்வம்.

**கோமுக்தீஸ்வரர் கோவில்**

திருவாவடுதுறை ஆதீனத்து கோமுக்தீஸ்வரர் கோவிலைச் சென்றடைந்தோம். இறைவன் - கோமுக்தீஸ்வரர், மாசிலாமணி ஈசர், இறைவி - அதுலசநாயகி, ஒப்பிலாமுலையம்மை. தலவிருட்சம் - அரசு, தீர்த்தம் - கோமுக்தி தீர்த்தம். இத்தலத்தின் மீது அப்பர் 5 பதிகங்கள், சம்பந்தர் ஒரு பதிகம், சுந்தரர் 2 பதிகங்களும் பாடியுள்ளனர். அம்பாள் பசுவடிவில் இருந்து சிவனை வழிபட்டு. இங்கு சாபவிமோசனம் பெற்றதால் சிவனுக்கு கோமுக்தீஸ்வரர் என்று பெயர். சிவபாதவிருதயர் நடத்திய யாகத்திற்கு பொருள் வேண்டி சம்பந்தர் இடரினும் தளரினும் பதிகம் பாடியது இங்குதான் சிவபூதகணங்கள் பொற்கிழியை பலிபீடத்தில் வைத்தனர். இப் பலிபீடத்தை இன்றும் வெளிப்பிரகாரத்தில் காணமுடியும்.

தன்னைத் தாக்க வந்த படைகளை திருமாளிகைத் தேவர் மதிலில் உள்ள நந்திகளை உயிர்ப்பித்து விரட்டியடித்தார். இன்றும் இவ்வாலயத்தின் மதிலில் நந்திகள் இல்லை. இத்தலத்தின் வெளிப்பிரகாரத்தில் திருமூலருக்கு தனியான சந்நிதி உண்டு. இங்கிருந்துதான் திருமூலர் எனப்படும் சுந்தரநாத யோகியார் 3000 திருமந்திரப் பாடல்களை ஆண்டுக்கொன்றாகப் பாடினார். போகர் முதலிய சித்தர்களுக்கு இறைவன் அட்டமாசித்தி அருளிய தலம் இதுவாகும். கோவிலைத் தரிசித்தபின் திருவாவடுதுறை ஆதீனம் சென்றோம்.

சைவசித்தாந்த மாணவர்கள் சித்தாந்தரத்தினம் என்று குறிப்பிட்ட பட்டச்சான்றிதழ்களையும் பன்னிருதிருமுறை மாணவர்கள் திருமுறை நெறிச்செல்வர் என்று குறிப்பிட்ட பட்டச் சான்றிதழ்களயும் ஆதீனக் குரு முதல்வர் 23வது பட்டத்து சீர்வளர்சீர் சிவப்பிரகாச சுவாமி களிடமிருந்து பெறும் பாக்கியம் பெற்றோம். எங்களுடன் வந்திருந் தவர்களும் சுவாமிகள் திருநீற்றுப்பிரசாதம் கொடுத்து ஆசீர்வதித் தார். அங்கு நடைபெற்ற நிகழ்வில் எங்கள் ஆசிரியர்கள் சைவப் புலவர்கள் சு. செல்லத்துரை அவர்களும் மு. திருஞானசம்பந்த

பிள்ளை அவர்களும் உரையாற்றினர். அன்றைய இரவு ஆதீனத்தில் உணவை முடித்துக்கொண்டு கும்பகோணத்தில் தங்கினோம்.

2012.01.29 அதிகாலை எழுந்து திருவாரூர் கோயிலுக்குச் சென்றோம். இங்குள்ள இறைவன் பெயர் - வான்மீகநாதர், புற்றிடங் கொண்டார். இறைவி - அல்லியங்கோதை, தலவிருட்சம் - சிவப்பு பாதிரி, தீர்த்தம் - கமலாலய தீர்த்தம், இது பிறக்க முக்திதரும் தலம். சப்த விடங்கத் தலங்களில் மூலாதாரத்தலம். பஞ்சபூதத் தலங்களில் பிருத்வி தலம். மணிமுத்தா நதியில் இட்ட பொன்னை சுந்தரர் இங்கு கமலாலயக்குளத்தில் எடுத்தார். சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம் பாடி வலதுகண் பார்வை பெற்ற தலம்.

தொடரும்............

## சைவநீதி பதினேழாவது ஆண்டுமலர் அறிமுகவிழா

சைவநீதி பதினேழாவது ஆண்டு மலர் யோகர் சுவாமிகளின் ஐம்பதா வது ஆண்டு குருபூசை மலராக சுவாமிகளின் திருவுருவைத் தாங்கிய அட்டைப் படத்துடன் வெளிவந்துளது.

இந்த மலரின் அறிமுகவிழா பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி மண்டபத்தில் 2014.05.04 ஞாயிற்றுக் கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெற்றது. ஓய்வுநிலை மேல்நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு ஜெ. விஸ்வநாதன் முதன்மை விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார். பண்ணிசை வித்தகர் ஹம்சானந்தி தர்மபாலனின் பஞ்சபுராணத்துடன் விழா ஆரம்பமானது.

சைவப்புலவர் சு. செல்லத்துரை தலைமையில் சித்தாந்தரத்தினம் கார்த்திகைக்குமரன் சரவணமுத்து வரவேற்புரையும் கொழும்பு விவே கானந்தசபை உபதலைவர் க. ஜெகதீசன் தொடக்கவுரையும், கிரியாகலாபமணி சிவஸ்ரீ மணி ஸ்ரீ நிவாசக்குருக்கள் ஆசியுரையும் வழங்கினர்.

அறிமுகவுரையை நாவலர் நற்பணிமன்றத் தலைவர் சித்தாந்தரத்தினம் கருணை ஆனந்தனும் நயவுரையை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உதவியாளர் திருமதி பவானி முகுந்தனும் நிகழ்த்தினர். இந்துக் கல்லூரி அதிபர் இராசரத்தினம் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

புரவலர்திலகம் ஆ. மா. சுப்பிரமணியம் அவர்கள் முதன்மைப் பிரதியைப் பெற்றுக்கொண்டார். சைவநீதி ஆசிரியர் சைவப்புலவர் செ. நவநீதகுமாரின் ஏற்புரையுடன் சித்தாந்தரத்தினம் பத்மா தங்கராஜா அவர்களின் மகிழ்வுரையுடனும் விழா நிறைவுற்றது.

பெரியபுராணத் தொடர் ..........

# சுந்தர மூர்த்தி நாயனார் புராணம்

**சித்தாந்தரத்தினம்**
**திருமதி. பத்மினி இராஜேந்திரா**

வைகறைப்பொழுது வந்ததும் சங்கிலியார் சேடியர்களுடன் ஒற்றையூர்த் திருக்கோவிலுக்குச் சென்றனர். சுந்தரரும் அங்கு சென்று "நாம் உம்மைப் பிரியோம் எனச் சபதம் செய்தற்கு இறைவன் திருமுன்னர் வருமாறு அழைத்தார். அதற்கு சங்கிலியார் இறைவன் திருமுன் சபதம் செய்தல் ஆகாது, இங்குள்ள மகிழமரத்தடியிலே சபதம் செய்தால் போதும் என்றார். அதனை கேட்ட சுந்தரர் இவர்கள் சொல்வதை மறுத்தால் திருமணம் நிகழாது தடைப்படுதல் கூடும் எனவே இதற்கு உடன்பட்டு "அவ்வாறே செய்யலாம்" என்று அவர்களை அழைத்துக் கொண்டு மகிழமரத்தடிக்கீழ் சென்று அந்த மகிழமரத்தை மூன்று முறை வலம் வந்து சங்கிலியாரை நோக்கி "இங்கு உன்னைப் பிரியேன்" எனச் சபதம் செய்து கொடுத்தார்.

அதுகண்டு சங்கிலியார் மனங் கலங்கி கடவுளுடைய ஆஞ்ஞையி னால் பாவியேன் இதைக்கண்டேனே என்று துக்கித்துக் கொண்டு ஒரு பக்கத்தில் மறைந்து நின்றார். சுந்தரர் சபதம் முடித்த பின் ஆலயத்துட் சென்று கடவுளை வணங்கித் தோத்திரஞ் செய்து கொண்டு திரும்பிவிட்டார். பின்னர் சங்கிலியார் புஷ்பமண்டபத்தில் தம்முடைய பணியை முடித்துக் கொண்டு கன்னிகா மடத்திற்கு திரும்பிவிட்டார்.

அன்றிரவே பரமசிவன் ஒற்றியூரில் இருக்கின்ற தம்முடைய தொண்டர்களுக்கு சொப்பனத்தில் தோன்றி, நம்முடைய அடியவ னாகிய சுந்தரருக்குச் சங்கிலியென்னும் கன்னிகையை விவாகஞ் செய்து கொடுங்கள் என்று ஆஞ்ஞாபித்து மறைந்தார். இறைவன் அருளாணையின் வண்ணம், அடியார்கள் பலவகைச் சிறப்புக்களுடன் சங்கிலியாரைச் சுந்தரருக்குத் திருமணம் செய்து வைத்தார்கள்.

விவாகம் செய்த சுந்தரமூர்த்தி நாயனார் சங்கிலியாரோடு கூடி அவ்வூரில் வாழ்ந்திருந்தார். இருக்கும் நாளிலே ஒருநாள் திரு வாரூரில் இருக்கின்ற வீதிவிடங்கப் பெருமானுடைய வசந்தோசவ காலம் சமீபித்ததை அறிந்து "வன்மீகநாதரை இவ்வளவு காலமும் மறந்திருந்தேனே" என்று துக்கித்து அவர்மேல், பத்திமையுமடி

மையையும் கைவிடுவான் பாவியே" என்னும் திருப்பதிகத்தைப் பாடி அருளினார்.

மற்றொருநாள் திருவாரூர் நினைவு மூளப்பெற்ற வன்தொண்டர் ஒற்றியூர்த் திருக்கோயில் சென்றிறைஞ்சி அவ்வூரை விட்டுத் திருவாரூர் நோக்கிப் புறப்பட்டார். ஒற்றியூர் எல்லையைக் கடந்தபோது நம்பியாரூரருடைய இருகண்களும் ஒளியிழந்து மறைந்தன.

வழிதெரிந்து நடக்கமுடியாத நிலையில் சுந்தரர் பெருமான் மூர்ச்சையடைந்தார். செய்வதறியாது திகைப்புற்ற வன்தொண்டர் "இக்கொடுமை நீங்க எம்பெருமானைப் பாடிப் போற்றுவேன்" என நினைந்து "அழுக்கு மெய்கொடு உன்திருவடி" எனவரும் திருப்பதி கத்தினைப் பாடிப்பரவினார். உடன்வரும் தொண்டர்கள் வழிகாட்டிக் கொண்டு முன்னே செல்ல வடதிருமுல்லை வாயிலையடைந்தார். வன்தொண்டர் சங்கிலியார் பொருட்டுத்தம் கண்களைப் பறித்தான் என்பதை நினைந்து "விண்பதிந்து ஏத்தும் வேதியா" என வரும் பதிகத்தைப் பாடிப் போற்றினார்.

திருவெண்பாகத்தை அடைந்து சிவபெருமானை வணங்கி, திருக் கோயிலுள்ளிரே என்று விண்ணப்பம் செய்ய சிவபெருமான் அவருக்கு ஊன்று கோல் கொடுத்து "உள்ளோம் போகீர்" என்று சொல்லியருளினார். வெண்பாகத்தை விட்டு நீங்கிப் பழையனூரை அடைந்தார். அங்கு காரைக்கால் அம்மையார் தலையால் நடந்தெய்திய திருவாலங் காட்டு எல்லையினை இறைஞ்சி, "முத்தா முத்திதரவல்ல" என்னும் பதிகம் பாடியருளினார்.

திருவேகம்பத்தையடைந்து, ஏகாம்பரநாத சுவாமியை வணங்கி "சிறியேன் செய்த பிழையைப் பொறுத்துச் சிறியேனுக்குத் தேவரீரைத் தரிசிக்கும் பொருட்டுக் கண்ணைத் தந்தருளும்" என்று பிரார்த்தித்தார். அப்பொழுது கடவுள் இடக்கண்ணை மாத்திரம் கொடுத்து, தமது திருக்கோலத்தைக் காட்ட சுந்தரர் பரவசமாகி அடியற்ற மரம் போல வீழ்ந்து எழுந்து "ஆலந்தானுகந்தமுது செய்தானை" என்னும் திருப்பதிகத்தைப்பாடி அந்தத் தலத்திலேயே சிலநாள் தங்கி, "அந்தியும் நண்பகலும் அஞ்சுபதம் சொல்லி" எனவரும் பதிகத்தைப் பாடிக் கொண்டே காஞ்சியிலிருந்து புறப்பட்டார்.

தொடரும் .....

சென்ற இதழின் தொடர்ச்சி.........

## உமாபதி சிவாசாரியாரும் சித்தாந்த அட்டகமும்

**சித்தாந்தரத்தினம் வே. கனகசபாபதி**

உமாபதியாரது வாழ்க்கை வரலாற்றையும். அவரது வாழ்வில் நிகழ்ந்த சில அற்புதங்களையும் சிறிது சிந்திப்பது மிகவும் பொருத்தமானதாகும்.

உமாபதியார் தில்லைக் கோயில் நடராசப் பெருமானுக்கு நாளும் பூசை செய்யும் தில்லைவாழ் அந்தணர் குலத்தில் அவதரித்தவ ராவர். திருக்கைலாய பரம்பரையில் வந்த புறச்சந்தான குரவர்கள் நால்வரில் நான்காமவராவர்.

திருக்கைலாயத்தில் தட்சணாமூர்த்தியிடம் வேதசிவாகமங்களைக் கற்ற திருநந்தி தேவர், சனற்குமாரர், சத்தியஞானதரிசினிகள், பரஞ்சோதி முனிவர் ஆகியோருக்கு வழிவழியாக உபதேசித்துப் பரஞ்சோதிமுனிவர் மூலமாக மெய்கண்டாரும் அவர் மூலமாக அருணந்தியாரும், மறைஞான சம்பந்தரும், உமாபதியாரும் முறையே உபதேசம் பெற்றவர்களாவர்.

உமாபதியார் ஒருநாள் கூத்தப் பெருமானுடைய பூசை வழிபாடு களை முடித்துக்கொண்டு வீடுதிரும்பும் போது மூன்றாம் சந்தான குரவராகிய மறைஞானசம்பந்தர் உமாபதியார் உண்மை உபதேசம் பெறும்பக்குவநிலை அடைந்துவிட்டமையை உணர்ந்து பட்டகட்டை யில் பகற்குருடு போவதைப் பாருங்கள் என்று கூறினார். இதனைக்கண்ணுற்ற உமாபதியார். சிவிகையில் நின்றும் இறங்கிய மறைஞானசம்பந்தரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கி அதன்பொருள் கேட்டு அவர்தம் மாணாக்கரானார்.

உமாபதியாரின் பக்குவ நிலையை மேலும் சோதிக்க வேண்டியும் உலகிற்கு உணர்த்த வேண்டியும் தில்லையிலுள்ள ஆடை நெய்வோர் வசிக்கும் திருவீதிக்குச் சென்று அங்கு ஆடைநெய்வோர் நெசவு நூலின் பாவிற்கு இட்டகூழின் மிச்சத்தைக்கைகளில் வாங்கி உண்டார். அவர்பின் வந்த உமாபதியாரும் அவர் கைகளில் வழிந்ததை ஏந்தி உண்டார். இதுகண்ட மறைஞானசம்பந்தர் அவரது

பக்குவ நிலையின் தெளிவுகண்டு அவருக்குச் சிவதீட்சை வைத்துச் சிவஞானபோத நுண்பொருள்களைச் சிவஞானசித்தியாரின் விளக்கத் தோடு தன் குருவாகிய அருணந்தியாரிடம் பெற்ற உபதேசத்தை உணர்த்தித்தன் மாணவர் ஆக்கினார்.

இதனை அறிந்ததில்லை வாழ் அந்தணர்கள் அந்தணர்குல ஒழுக்கத்தினின்றும் விலகியவராகக்கருதி உமாபதியாரைத்தம் மரபினின்றும் விலக்கிவைத்தனர். இதனால் நடராசப் பெருமானைத் தினமும் தீண்டி வழிபட முடியாதவராகித் தில்லைக்கு அருகில் சோழமன்னர் வழங்கிய கொற்றவன் குடி என்னும் சிற்றூரில் திருமடம் ஒன்றில் தங்கியிருந்து பக்குவமாணாக்கர்களுக்குச் சிவஞான நூல்களை உபதேசித்து நடராசப் பெருமானை மனத்தி னால் பூசை செய்து தவநிலையில் வாழ்ந்து வரலாயினார். அவ் வாறிருக்கும் போது ஒருநாள் தில்லைப் பெருமானுக்குப் பூசனை செய்யும் அவரது முறைவந்தபோதும் அவரைப்பூசை செய்யவிடாது அந்தணர்கள் தடுக்கவே மனம் தளராத உமாபதியார் தனது மடத்தில் இருந்தவாறே மனதினாலே செய்து முடித்தார். அன்று பூசைக்குச் சென்ற அந்தணர்கள் கூத்தப்பெருமானிருக்கும் பெட்டகத்தைக்காணாது பெருமானை வேண்டவேதான் உமாபதிசிவத் திடம் உள்ளோம் என்று அசரீரிவாக்கு எழுந்தது. அந்தணர்கள் தம் குற்றத்தை உணர்ந்து உமாபதிசிவத்திடம் சென்று அவரது பாதங்களில் வீழ்ந்து வணங்கித்தம் குற்றத்தைப் பொறுத்தருளுமாறு வேண்டினர்.

இதுபோலவே முற்பிறவியில் முனிவராக இருந்து ஊழ்வினை காரணமாக இப்பிறப்பில் புலையனாகப் பிறந்து தன்மனைவியோடு நாள்தோறும் தில்லைக்கோயில் மடைப்பள்ளிக்கு விறகு வெட்டிக் கொடுக்கும் திருத்தொண்டு செய்து வந்த பெற்றான் சாம்பான் பக்குவ நிலை கண்டு இறைவன் அவனது கனவில் தோன்றி ஒரு சீட்டைக் கொடுத்து இதை உமாபதிசிவத்திடம் கொடு அவர் உனக்கு முத்திப்பேற்றினை வழங்குவார் என்று கூறவே கனவு நீங்கிப் பார்த்தபோது தன்கையிலிருந்த சிட்டையைக் கண்டு அதிசயித்து அதனைக் கொண்டு போய் உமாபதிசிவத்திடம் சேர்ப்பித்து அவர் மூலம் முத்திப்பேற்றைப் பெற்றுக்கொண்டான். இதை அறியாத அவன் மனைவி உமாபதிசிவம் தன் கணவனைக் கொன்றுவிட்டான் என்று முறையிட்டாள். அரசன் நடந்ததைக்

கேள்வியுற்று அதனை நிரூபிக்குமாறு கேட்கவே அபிடேக நீர் பாய்ந்து அதனால் வளர்ந்திருந்த முள்ளிச் செடிக்குச் சிவதீக்கை வைத்து அதனை முத்தி பெறச் செய்தார். அடுத்துத் தில்லைக் கோயில் திருவிழாவின் போது உமாபதிசிவம் அழைக்கப்படாமையின் கொடி ஏறாதிருக்கவே உமாபதி சிவம் வந்தாலன்றிக் கொடி ஏறாதென்ற அசரீரி ஒன்று கேட்டது. அதன்பின்னர் உமாபதிசிவம் அழைத்துவரப்பட்டு அவர் கொடிக்கவி பாடவும் கொடி தானாக ஏறியது.

தில்லைத்திருத்தலப் பெருமைகளைக் கூறும் கோயிற்புராணத்தை கூத்தப் பெருமானின் சேவடிக்கீழே அரங்கேற்ற வேண்டுமென்று விரும்பிய உமாபதியார் தில்லைவாழ் அந்தணர்கள் மறுக்கவே இறைவன் முன்னரைப்போலவே பெட்டகத்தோடு வந்து உமாபதி சிவத்துடன் இருப்பதாக அசரீரி எழவே உமாபதியின் மடம் சென்று கோயிற் புராணச்சுவடிகளையும் உமாபதியாரையும் சிவிகையில் ஏற்றிப் பல சிறப்புக்களுடனும் பொன்னம்பலத்திற்கு வரவே இறைவன் காட்சி கொடுத்துக் கோயிற்புராணமும் சிறப்பே அரங்கேறியது. இவ்வாறு பல அற்புதங்கள் நிகழ்ந்தன.

உமாபதியார் சிறப்பான சேவைகள் பல புரிந்து சித்திரைச் சதைய நாளொன்றில் சிவசாயுச்சிய முத்தி பெற்றார்.

**இங்கற்பமுங் குறைவின் ஆகமங்கள் எடுத்துரைசெய்சித்தாந்தத்தைச்**
**சங்கற்ப நிராகரணம் செயும்முகத்தாற் சாதித்தோன் தில்லைசார்ந்தே**
**நங்கற்ப வாசமெல்லாம் நாசம் செய் நோக்குடையோன் குரவர்ச் செம்மல்**
**துங்கப்பொற்பதமுதவும் உமாபதிதாள் சுமந்தின்பம் பொருந்தி வாழ்வாம்**

**எல்லோரும் எந்நாளும் ஏத்திப்போற்றும் எழிற்குமரன்**
**உமாபதியார் பாதம் போற்றி**

# ஒன்பது தந்திரங்களாக வகுக்கப்பட்ட திருமந்திரம்

சித்தாந்தரத்தினம்
சிதம்பரம் சிவானந்தராஜா

தமிழ்மொழியில் சமய நூல்களுக்கெல்லாம் முதல் நூலாக விளங்குவது, திருமுறைகளில் பத்தாம் திருமுறையாக தொகுக்கப்பட்டுள்ள திருமந்திரமாகும். இது சைவசித்தாந்த உண்மைகளை உள்ளடக்கிய ஒரு சாத்திர நூலாகவும் அதேவேளை பாராயணம் பண்ணத்தக்க தோத்திர நூலாகவும் மட்டுமின்றி வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒழுக்கநெறிகளை போதித்து இறைவனது திருவடிப் பேற்றை அடைவதற்கான மார்க்கத்தைக்காட்டும் அருள் நூலாகவும் போற்றப்படுவது. இந்நூல் மூவாயிரம் மந்திரங்களைக் கொண்டது. இதனை அருளிய திருமூலதேவநாயனார் மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்து ஆண்டுக்கு ஒரு மந்திரமாக அருளிச்செய்த அரிய நூலாகும்.

உலகோர் உணர்ந்து பயன்பெறும் பொருட்டு திருமூலதேவநாயனார் வாழ்க்கைக்குரிய தத்துவங்களைப் பகுத்து ஒன்பது தந்திரங்களாக இந்நூலைத் தந்துள்ளார். வடமொழியிலுள்ள சிவஆகமத்தின் தத்துவ உண்மைகளைத் தமிழில் ஆக்கித் தருமாறு பணித்தே மூலனென்னும் இடையனின் உடலில் தன்னைப் புகுவித்தாரென்றும், ஆண்டுக்கு ஒன்றாக மூவாயிரம் மந்திரங்களைத் தந்ததாகவும் இவை தமிழ்மூவாயிரம் என வழங்கப்படுவதாகவும் திருமூலரே அகச்சான்றாக வெளிப்படுத்தியுள்ளார். அத்தோடு இவற்றை ஓதுவதனால் பெறப்படும் பயனையும் கூறியுள்ளார்.

**மூலன் உரைசெய்த மூவா யிரந்தமிழ்**
**ஞாலம் அறியவே நந்தி அருளது**
**காலை எழுந்து கருத்தறிந்து ஓதிடின்**
**ஞாலத் தலைவனை நண்ணுவர் அன்றே** 99

இந்த மூவாயிரம் மந்திரங்களையும் உலகோர் உணர்ந்து பயனுறும் வண்ணம் ஒன்பது தந்திரங்களாக வகைப்படுத்தி பொருளறிய வகை செய்துள்ளார். பதி, பசு, பாசம் என்பன அநாதி. பதி கருணை கொண்டு பசுவை அணுகும் போது பாசம் அகன்று பசு பதியோடு ஒன்றிவிடும் அதுவே முத்தி நிலை. இதனை உணர்த்தும் வண்ணம் யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை, கொல்லாமை, புலாலுண்ணாமை, பிறன்மனை விளையாமை, நடுவுநிலைமை, அன்பு, கள்ளுண்ணாமை, தானம்,

அறவாழ்வு என்பன பற்றி முதலாவது தந்திரத்தில் தெளிவுபடுத்தி, நிலையற்ற வாழ்வைப் பற்றிக் கொண்டிராமல் நிலையான முத்திப்பேற்றுக்கு வழிகாணுமாறு அறிவுறுத்துகின்றார்.

**பதி பசு பாசம் எனப் பகர் மூன்றில்**
**பதியினைப் போல் பசு பாசம் அநாதி**
**பதியினைச் சென்றணுகாப் பசு பாசம்**
**பதி யணுகில் பசு பாசம் நில்லாவே** 115

இரண்டாவது தந்திரம் புராண வரலாறுகளையும், இறைவன் புரிந்த வீரச்செயல்களையும் ஆன்மாவுக்குச் சொல்லி வழிகாட்டுகின்றது. புதிய கருவின் உற்பத்தித் தத்துவங்களை அறிவிக்கின்றது. அதன்மூலம் சிருஷ்டி, திதி, சம்ஹாரம், திரோவம், அனுக்கிரகம், கர்ப்பக்கிரியை, குருநிந்தை, சிவநிந்தை, தர்மத்தின் பலன், அதை யாருக்குச் செய்யவேண்டும், பெரியாரைத் துணைக்கோடல் என மனித வாழ்வுக்கு வழிகாட்டும் பல தத்துவங்களைச் சொல்லுகின்றது. இவற்றை ஆழ்ந்து நோக்கின் இவற்றின் உண்மை புலப்படும்.

**ஈவது யோக இயம நியமங்கள்**
**சார்வதறிந் தன்பு தங்குமவர்க் கின்றி**
**ஆவதறிந் தன்பு தங்காதவர்களுக்கு**
**ஈவ பெரும் பிழையென்று கொள்வீரே** 506

மனிதனுக்குரியது மனம், மனத்தால் மனிதன் உயர்கின்றான் மனத்தை உயர்த்துவது மனிதனின் கடமை, மனம் உணர்ச்சிப் பிரவாகத்தால் மனைவி, மக்கள்,மாடு,கன்று, துக்கம், சந்தோசம் என்று பள்ளத்தை நோக்கியும் பாயும், கருணை, அன்பு, மகிழ்ச்சி என்று இறைவனை எண்ணி உச்சியையும் அடையும். பள்ளத்தை நோக்கினால் பாவமும் துன்பமும் மிகுகின்றன. உச்சியில் ஏறினால் அழியாத இன்பமுண்டாகும். ஆதலால் அழியாத இன்பத்தை நோக்கி ஏற வேண்டும். உச்சியில் ஏறுவதற்கு வழிகளான இயமம், நியமம், ஆசனம், பிரணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்ற எட்டு உறுப்புக்களைக் கொண்ட யோக நிலையை மூன்றாம் தந்திரம் உணர்த்துகின்றது.

**இயமம் நியமமே எண்ணிலா ஆதனம்**
**நயமுறு பிராணாயாமம் பிரத்தியாகாரஞ்**
**சயமிகு தாரணை தியானஞ் சமாதி**
**அயமுலும் அட்டாங்க மாவதுமாமே.** 552

நான்காவது தந்திரமாக மந்திர உபாசனை சொல்லப்படுகின்றது. இங்கு பேசாப்பெருவெழுத்தான பஞ்சாக்கர மந்திரம், திருவைந் தெழுத்து திருவம்பலச் சக்கரம் என்பன பற்றியும் இறைவனை எழுந்தருளிவித்து அர்ச்சனை மூலம் உபாசிக்கும் முறை, புறப்பூசை, அகப்பூசை, ஹோமயாக குண்டங்களின் இலக்கணம் என்பன விளக் கப்படுகின்றன.

**அஞ்செழுத்தாலே அமர்ந்தனன் நந்தியும்**
**அஞ்செழுத்தாலே அமர்ந்த பஞ்சாக்கரம்**
**அஞ்செழுத்தாகிய வக்கர சங்கரம்**
**அஞ்செழுத்துள்ளே அமர்ந்திருந்தானே** 934

சைவநெறிபற்றியும், சைவர்களில் சுத்தசைவம், அசுத்தசைவம், மார்க்க சைவம், கடுஞ்சுத்தசைவம் என நால்வகைச் சைவத் துள்ளும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நிலைகளில் இருந்து ஒழுகி ஈடேறும்வகையில் சத்திநிபாதம் எனப்படும் அவனருளையே கண்ணாகக் காணுதல் என்னும் நிலையடையும் முறையை விளக்குகின்றது ஐந்தாவது தந்திரம். இங்கு இறைவன் குருவாக வந்து குணங்கள் நீக்கி ஞானத்தை நல்குவான். உலகிலுள்ள எல்லாச் சமயங்களாயும் சமயக் கடவுளாயும் இருப்பவன் அவனே என்பதை சைவர்களே அறிவர் என்பதையும் உணர்த்துகின்றது.

**நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்**
**தேடித் திரிந்து சிவபெருமானென்று**
**பாடுமின் பாடிப் பணிமின் பணிந்த பின்**
**கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க் கொள்வானே.** 1445

அடுத்துவரும் ஆறாவது தந்திரம் குரு தரிசனத்தையும், சிவனே குருவாகவந்து ஆட்கொள்வான் என்பதையும், தவத்தின் மகிமை யையும் திருவருட்பேற்று மகிமையையும், பக்குவர், அபக்குவர் பற்றியும், திருநீற்றின் மகிமை பற்றியும் குறித்துக் காட்டுகின்றது.

**குருவே சிவமெனக் கூறினன் நந்தி**
**குருவே சிவமென்பது குறித்தோரார்**
**குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்**
**குருவே உரையுணர்வற்ற தோர்கோவே** 1581

இறைவன் வடிவு கொள்ளும் அண்டலிங்கம், பிண்டலிங்கம், சதாசிவலிங்கம், ஆன்மலிங்கம், ஞானலிங்கம், சிவலிங்கம் என்பன பற்றியும் அவற்றைத் தியானிக்கும் ஆறு ஆதார நிலைகளான மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி,

ஆஞ்ஞை என்பன பற்றியும் சிவபூசை, குருபூசை, மகேசுவரபூசை அடியார் பெருமை, இந்திரியம் அடக்குதல் என்பன பற்றியும் ஏழாவது தந்திரப் பாடல்கள் விளக்குகின்றன.

**உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்**
**வள்ளற் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்**
**தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன்சிவலிங்கம்**
**கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே.** 1823

ஆறு ஆதாரங்களில் தியானித்து சித்தி பெற்ற ஞானிகள் நால் வகைப்படுவர். அவை விஞ்ஞானர், எஞ்ஞானர், அஞ்ஞானர், மெய்ஞ் ஞானர் என்பராம். இவர்கள் பெறும் கீழாவத்தை, மேலாவத்தை, மத்தியாவத்தை இவை கடந்த நிம்மல அவத்தை என்பன பற்றியும் அவர்கள் பெறும் சிவமுத்தி, பரமுத்தி, சொரூப முத்தி ஆகிய மூவகை முத்தி நிலைகள் பற்றியும் அவர்கள் உள்ளமே உருவமென்றும் அஞ்ஞானியர் பெறும் இன்ப நிலை பற்றியும் எட்டாந்தந்திரம் விளக்குகின்றது.

**தன்னையறியத் தனக்கொரு கேடில்லை**
**தன்னையறியாமல் தானே கெடுகின்றான்**
**தன்னை அறியும் அறிவை அறிந்தபின்**
**தன்னையே அர்ச்சிக்கத் தானிருந்தானே** 2355

இறுதியாகவரும் ஒன்பதாம் தந்திரம் குருவின் உபதேசம், நமசிவாய என்னும் ஸ்தூல பஞ்சாக்கரம், சிவாயநம என்னும் சூக்கும பஞ்சாக் கரம், சிவயசிவ என்னும் அதிசூக்கும பஞ்சாக்கரம் என்று வேதத்திலும் போற்றப்படுகின்ற திரு ஐந்தெழுத்தின் சிறப்பு பற்றியும் முகத்தின் கண் கொண்டு பார்க்கும் போது ஆனந்தம் உண்டாவ தில்லை.. அகக்கண்கொண்டு பார்க்கும்போதே ஆனந்தம் ஏற்படு கின்றது. சிந்தை தெளிந்தவர்களுக்கே சிவன் வெளிப்படுவான் என்ற அற்புதச் செய்திகளை வெளிப்படுகின்றது.

**முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்**
**அகத்திற் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்**
**மகட்டுத்தாய்தான் மணாளனோடாடிய**
**சுகத்தைச் சொல்லென்றாற் சொல்லுமா றெங்கனே.** 2944

**வாழ்கவே வாழ்க என் நந்தி திருவடி**
**வாழ்கவே வாழ்க மலமறுத்தான்பதம்**
**வாழ்கவே வாழ்கமெய்ஞ் ஞானத்தவன் தான்**
**வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே.**

சுபம்

# மணமக்கள் ஆல்போல் தளைத்து அறுகு போல் வேரூன்றி வாழ அறுகு அரிசி அட்சதை

வே. தியாகராசா
திவ்ய ஜீவன சங்கம்
கொழும்புக் கிளை

வையத்தில் வாழ்வாங்கு வாழும் மனிதரை வானவரும் மகிழ்ந்து வாழ்த்துகின்றார்கள். ஈசனுடைய இந்த வாழ்த்துக்கள் நம் மக்களுக்கு கிடைத்தற்கரிய வரமாக அமைந்துள்ளது.பூவுலக திருமணங்கள் வானவரையும் மகிழ்விக்கிறது என்பதை நாம் நம்பிக்கையுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும். இறைவரத்தினால் நித்திய ஆனந்தத்தில் இருக்கும் தேவர்கள் பூவுலகிற்கு வந்து திருமண விழாக்களை கண்டுகளித்து மகிழ்ந்து வாழ்த்துவர். அவர்களின் பெருவிருப்பும் அதுவாகத்தான் இருக்கும்.

சைவகலாசார நெறியில் வழுவாது நின்று மணமேடை அமைத்து அதிலே மணமக்களை அமரவைத்து அழகுபார்த்து திருமண விழாக்களை நம்மவர்கள் நடாத்துவது இறை நம்பிக்கையின் சிறந்த வெளிப்பாடு. சுப நேரங்களை நேர்த்தியாகச் சரிபார்த்து அந்த சுப வேளைக்கு அமைவாக நாளையும் நேரத்தையும் குறித்து அமைத்துக் கொள்கிறார்கள்.

வேதியர்கள் மணமக்களுக்கு முன்பாக திருமண மேடையில் அமைத்த யாக குண்டத்தில் வேத மந்திரங்கள் ஒலிக்க வேள்வித் தீயை வளர்த்து பசு நெய்யை சொரிந்து மூலிகைச் சமித்துக்களை ஆகுதி யாக்கி ஹோமம் வளர்க்கிறார்கள். வேத மந்திரங்களின் தெய்வீக ஒலியிலும் பசு நெய் மூலிகைகளின் ஆகுதியின் நறுமணத் திலும் தெய்வீக பொலிவு நிறைந்து இருப்பதால் தேவர்கள் மனமகிழ்ந்து மணமக்களையும் மணவிழாக்காண வந்து இருக்கும் மக்களையும் மகிழ்ந்து வளமுடன் வாழ்க என்று வாழ்த்தி மகிழ்கிறார்கள். மங்கள வாத்தியங்களின் நாத ஒலி இனிமையுடன் செவி வழிப்புகுந்து கூடி இருக்கும் மக்களையும் தேவர்கள் போல் தெய்வீக பொலிவு பெறும் பாக்கியத்தை அடையும் பேறு பெற காரணமாய் அமைந்து விடுகிறது இந்தப் பொழுதில் திருமணமண்டபம் தேவலோகம் ஆகிறது.

மணமக்கள் சிவபார்வதி சொரூபமாக அமர்ந்து மணமேடையை அலங்கரிப்பதாய் எண்ணிப் பாருங்கள். இந்த இனிய பொழுதில் மணமகன் மணமகளுக்கு திருமாங்கல்யம் பூட்டி மகிழ்வார். அங்கு

கூடியிருக்கும் நாங்களும் தேவர்களாகிறோம். மண்டபத்தில் நிறைந்த தேவர்கள் எம்பெருமானையும் இறைவியையும் வாழ்த்து வதுபோல் மணமக்களையும் விழாவைக் கண்டுகளிக்க வந்திருக்கும் மக்களையும் வாழ்த்துகிறார்கள். தேவர்கள் தாம் மனம்நிறைந்து மணமக்களை வாழ்த்தும் பொழுது நம்மக்களும் வானவர் தகுதியைப் பெற்று அட்சதை தூவி மணமக்களை வாழ்த்துவதற்கு அழைக்கப்படுகிறோம்.

தேவர்களின் மகிழ்ச்சி நிறைந்த வாழ்த்துக்கள் திருமண மண்ட பத்தை நிறைந்திருக்கிறது. நாமும் இமயவர்களுக்கு சரிநிகராக எமது வாழ்த்துக்களை மணமக்களுக்கு உரித்தாக்குவோம். வேத விற்பனர்களின் ஆசியைத் தொடர்ந்து நாமும் அட்சதை தூவி மணமக்களை வாழ்த்துகின்றோம்.

நாம் மணமக்களின் சிரசில் தூவும் அறுகு அரிசி அட்சதையில் தெய்வ ஆசியும் நிறைந்து இருக்கும்.

அட்சதையை பாதத்தில் இருந்து மேல் நோக்கி தூவுவது முறையும் இல்லை. சிரசின் உச்சியில் தான் அறுகு அரிசி அட்சதையை தூவி வாழ்த்த வேண்டுமென்பதை மனதில் கொள்ள வேண்டும்.

நாம் விரும்பும் ஆடம்பரங்கள் வசதிகளின் வடிகால். சடங்குகளின் விதிமுறைகளும் ஒழுங்குகளும் ஆத்மாவின் ஆகுதி என்பதை மனதளவில் ஏற்றுக்கொள்ளும் பொழுது தெய்வம் நம்மை நேரான நெறி முறையில் வழிநடாத்துமென்பதை நம்பவேண்டும். மேய்ப்பார் கள் இல்லாமல் மனம் போன போக்கில் வாழ்வதை காலத்தின் தேவை கருதி கட்டுக்குள் கொண்டு வரவேண்டும். அதை உணர்வு பூர்வமாக உண்மையுடன் நம்மை நாம் திடத்துடன் ஒழுங்குபடுத்திக் கொண்டால் எல்லாம் நலமாகும். பழக்க வழக்கங்கள் பண்பாட்டின் தோற்றுவாய். மனங்களில் அன்பு நிறையும் பொழுது நெறியான வாழ்வில் மன உறுதியும் கலாச்சார விழுமியங்களை போற்றிகாக்க வேண்டும் என்ற உத்வேகமும் கூடி வரும்.

இதனால் நாமும் நம்மை தொடர்ந்து வரும் தலைமுறை செல்வங் களும் வளமான வாழ்வைப் பெற்று வையகமும், வானகமும், இமையோரும் போற்ற வாழ்வோமாக. இது உறுதி.

**"வாழ்க வையகம் வாழ்க வளமுடன்"**

சென்ற இதழின் தொடர்ச்சி.........

# வாரியாரின் ஒரு வரி பதில்

50. உறக்கம் யாது?
**ஆன்மாக்களின் மூடத்தனம்.**
51. சம்சாரத்தில் சாரம் எது?
**அடிக்கடி இதையே நினைத்துக் கொண்டிருப்பது.**
(சம்சாரத்தில் சாரமேது என்று நினைத்துக் கொண்டே இருப்பதால் பற்று விட்டுப் பிறப்பு அறுக்கலாம்)
52. தாமரையிலைத் தண்ணீர்போல் நிலை இல்லாதன எவை?
**இளமை, செல்வம், ஆயுள்.**
53. எவன் ஆத்மாவை நல்வழிப்படுத்த முடியாது?
**போக்கிரி, நித்திய சந்தேகி, அழுமூஞ்சி, நன்றியறிவில்லாதவன்.**
54. ஜகத்தை (உலகத்தை) எப்படி ஜெயிக்கலாம்?
**சத்தியமும் பொறுமையும் இருந்தால்.**
55. எவனைத் தேவர்கள் கும்பிடுகிறார்கள்?
**தயையுடையவனை.**
56. எதைக்கண்டு நடுங்க வேண்டும்?
**சம்சாரமாகிய காட்டைக் கண்டு.**
57. மனிதர் எவனுக்கு வசமாவார்?
**சத்தியமும் பிரியமும் பணிவும் உள்ளவனுக்கு.**
58. காணப்படுவனவும் காணப்படாதனவுமாகிய பொருகளை அடைவது எந்த வழியில்?
**நியாயமான வழியில்.**
59. தானம் என்பது எது?
**கேட்காது கொடுத்தல்.**
60. நண்பன் யார்?
**பாவம் செய்யாது தடுப்பவன்.**
61. அழகு எது?
**சீலம்.**
62. வாக்கிற்கு அழகு எது?
**சத்தியம் (உண்மை).**
63. மின்னல் ஒளிபோல் சஞ்சலமானவை எவை?
**தீயவர் நட்பும், பரதாரத் தொடர்பும்.**
64. கலிகாலத்திலும் குலசீலத்தினின்றும் அசைவில்லாதவர் யார்?
**உத்தம மனிதர்கள்.**
65. சிந்தாமணிபோல் கிடைத்தற்கரியது எது?
**சதுர்ப் பத்ரம் (நான்கு சுபம்).**
66. சதுர்ப் பத்ரமாவன யாவை?
**1. இனிய சொல்லுடன் வழங்கும் தானம்.**
**2. கர்வமில்லாத கல்வி.**
**3. பொறுமையுடன் பெருமை.**
**4. தியாகத்துடன் கூடிய செல்வம்.**
67. பரிதாபப்படத் தக்கது எது?
**கருமித்தனம்**

(தனக்குமில்லாமல், பிறருக்குமில்லாமல், இகத்துக்கு மில்லாமல், பரத்துக்குமில்லாமல் நிறைய சேர்த்து வைத்துக் கொண்டிருத்தல்).

68. பொறுமையை யாரிடம் கற்றுக்கொள்ள வேண்டும்?
**மரத்திடம்.**

69. புகழப்படுவது எது?
**வள்ளல் தன்மை.**

70. அறிவுடையோர் யாரை வணங்குவர்?
**இயல்பாகவே எப்பொழுதும் வணக்கமுள்ளோரை.**
(காரியத்தை முன்னிட்டு பணிவுடன் இருப்பது இயல்பான பணிவாகாது)

71. காரியத்தை முன்னிட்டு அடக்கமாக இருப்பவன் எதைப் போன்றவன்?
**ஏற்ற மரத்தைப் போன்றவன்.**

72. எப்படி?
**சால் நிரம்பியவுடன் ஏற்ற மரத்தின் தலை ஆகாயத்திலிருக்கும், சால் வடிந்ததும் தலை குனிந்து விடும். அப்படி, காரியத்தை உத்தேசித்து அடக்கமாக இருப்பவன் ஜீவனம் கிடைத்து விட்டால் தலை விரித்துக் கொள்வான். ஜீவனம் கிடைக்காத போது தலையைத் தொங்கப் போட்டுக்கொள்வான்.**

73. நாம் பிறந்துள்ள குலமாகிய தாமரை எந்தச் சூரியனைக் கண்டால் ஆனந்தத்துடன் பிரகாசிக்கும்?
**குணங்கள் முழுமையாக இருந்தும் பூரண அடக்கத்துடன் இருப்பவனாகிய சூரியனைக் கண்டு.**

74. இந்தப் பிரபஞ்சம் யாருக்கு வசப்படும்?
**பிரியமாகப் பேசக் கற்றுக் கொண்டு தருமத்தைக் கடைப்பிடிப் பவனுக்கு** (உலகத்தை வசப்படுத்துவதற்காக அடக்கத்தைக் கைக்கொள்ளக் கூடாது. இயல்பாக அடக்கத்துடன் இருந்தாலே உலகம் வசப்பட்டு விடும்)

75. வித்துவான்களின் மனத்தைக் கவர்வது யாது?
**நல்ல கவிதையும், அறிவுள்ள பெண்ணும்.**

76. விபத்து எவனைத் தீண்டாது?
**பெரியோர் வார்த்தையை அனுசரித்து நடப்பவனை.**

77. இலட்சுமி யாரை விரும்புவாள்?
**தூய மனதுடைய நீதி தவறாத நடையுடையவனை.**

78. இலட்சுமி யாரை விட்டு விரைவில் விலகுவாள்?
**ஆன்றோர்களை, குருவை நித்திக்கும் சோம்பேறித்தனம் உடையவனை.**

79. வாசம் செய்ய வேண்டியது எங்கே?
**நல்லோர் அருகில், காசி க்ஷேத்திரத்தில்**

80. எதனால் மனிதன் துக்கமில்லாதவனாக இருப்பான்?
**வணக்கமுள்ள மனைவியாலும் நிலையான செல்வத்தாலும்.**

தொடரும் ......

# அகத்தியர் தேவாரத்திரட்டு உரைவிளக்கம்

## திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச் செய்த நமச்சிவாயத்திருப்பதிகம்

**3 ஆம் திருமுறை** **பண்: கௌசிகம்**

**கலாபூஷணம், சைவப்புலவர்**
**சு. செல்லத்துரை**

**பதிக வரலாறு**

ஞானசம்பந்தப் பெருமான் திருமணம் செய்யும் விருப்பம் இல்லாத போதும் பெற்றார் சொற்கேட்டல் பிள்ளைகள் கடன் எனக் கருதித் திருமணம் செய்யச் சம்மதித்தார். நல்லூர்பெருமணம் எனும் ஊரில் நம்பாண்டார் திருமகளுக்கும் திருஞானசம்பந்தருக்கும் திருமணம் நடைபெற்றது. தனக்குத் திருமண விருப்பு இல்லை என்பதை கல்லூர்ப் பெருமணம் வேண்டா கழுமலம் எனும் பதிகம் பாடி யுணர்த்தினார். மணம்காண வந்தோர் எல்லோரையும் அழைத்துக் கொண்டு நல்லூர்ப் பெருமணச் சிவாலயத்துள் சென்றார் அங்கு யாவரும் காணச் சிவசோதி தோன்றியது. காதலாகி கசிந்து எனும் இப் பதிகத்தைப் பாடிய வண்ணம் யாவருடனும் வைகாசி மூலத்தில் சிவசோதியுட் கலந்தார். இதனைத் தெய்வப்புலவர் சேக்கிழார்

**ஞானமெய்ந் நெறிதான் யார்க்கு நமச்சிவாயச் சொலாம் என்**
**றானசீர் நமச்சிவாயத் திருப்பதிகத்தை அங்கண்**
**வானமும் நிலனும் கேட்க அருள்செய்(து) இம்மணத்தில் வந்தோர்**
**ஈனமாம் பிறவிதீர யாவரும் புகுக என்ன (பெரியபுராணம் 1248)**

எனக்குறிப்பிடுகின்றார்.

ஞானசம்பந்தப் பெருமானின் இறுதிப்பதிகம் இதுவேயாகும்.

திருச்சிற்றம்பலம்

01) **காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி**
**ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது**
**வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது**
**நாதன் நாமம் நமச்சி வாயவே.**

**காதலாகிக் கசிந்துகண்ணீர்மல்கி**
அன்புமிகுந்து உள்ளம் உருகி ஆனந்தக் கண்ணீர் சொரிய
**ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது**
ஓதுவர்களை நல்லகதியில் சேர்ப்பிப்பதும்

**வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது**
நான்கு வேதங்களின் உட்பொருளாயிருப்பதுமாகிய
**நாதன் நாமம் நமச்சி வாயவே**
சிவபெருமானுடைய நாமமாகிய நமச்சிவாய எனும் ஐந்தெழுத்து மந்திரமே யாகும்.

02) **நம்பு வாரவர் நாவி னவிற்றினால்**
**வம்பு நாண்மலர் வார்மது வொப்பது**
**செம்பொ னார்தில கம்முல குக்கெலாம்**
**நம்பன் நாமம் நமச்சி வாயவே.**

**நம்பு வாரவர் நாவி னவிற்றினால்**
விரும்புபவர்கள் தங்கள் நாவில் ஐந்தெழுத்தை ஓதினால்
**வம்பு நாண்மலர் வார்மது வொப்பது**
அது வாசனை கமழ்கின்ற புத்தம்புது நாள்மலரில் சொரிகின்ற தேனைப் போன்றிருக்கும்.
**உலகுக்கெலாம் செம்பொ னார்திலகம்**
எல்லா உலகத்திற்கும் செம்பொன் திலகம் போன்றது.
**நம்பன் நாமம் நமச்சி வாயவே.**
நம்பனாகிய சிவபெருமானுடைய நாமமாகிய நமச்சிவாய எனும் மந்திரமேயாம்.

03) **நெக்கு ளார்வ மிகப்பெரு கிநினைந்**
**தக்கு மாலைகொ டங்கையில் எண்ணுவார்**
**தக்க வானவ ராய்த்தகு விப்பது**
**நக்கன் நாமம் நமச்சி வாயவே.**

**நெக்குளார்வ மிகப்பெருகிநினைந்து**
உள்ளம் நெகிழ்ந்து ஆசைமிகுந்து சிவனை நினைந்து
**அங்கையில் அக்கு மாலைகொடங்கையில் எண்ணுவார்**
அழகிய கையில் உருத்திராக்கச் செபமாலை கொண்டு எண்ணிச் செபிக்கின்றவர்களை
**தக்க வானவ ராத்தகு விப்பது**
தகுதிவாய்ந்த தேவர்களாக்குவது
**நக்கன் நாமம் நமச்சி வாயவே.**
ஆடை அற்றவனாகிய சிவபெருமானுடைய நாமமாகிய நமசிவாய எனும் ஐந்தெழுத்து மந்திரமேயாகும்.

04) **இயமன் தூதரும் அஞ்சுவர் இன்சொலால்**
**நயம்வந் தோதவல் லார்தமை நண்ணினால்**
**நியமந் தான்நினை வார்க்கினி யான்நெற்றி**
**நயனன் நாமம் நமச்சி வாயவே.**

**நியமம் தான் நினைவார்க்கு இனியன்**
தன்னைத்தினமும் நினைந்து வழிபடுபவர்க்கு இனிமையைச் செய்பவன்
**நெற்றி நயனன்**
நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானின்
**நாமம் நமச்சிவாயவே**
நாமமாகிய நமச்சிவாய எனும் மந்திரத்தை
**நயம்வந்து ஓதவல்லார்தமை நண்ணினால்**
இனிய சொல்லோடு விரும்பி ஓதவல்லவர்களோடு சேர்வரேல்.
**இயமன் தூதரும் அஞ்சுவர்**
இயமன் தூதர் கூட அவர்களை அணுக அஞ்சுவார்கள். ஸ்ரீ பஞ்சாட்சரத்தை ஓதுபவர்களுக்கு மட்டுமல்ல அவர்களைச் சேர்ந்தவர்களுக்கும் இயமபயமில்லை. எனவே இறப்பு இல்லையாம்.

05) **கொல்வா ரேனுங் குணம்பல நன்மைகள்**
**இல்லா ரேனும் இயம்புவ ராயிடின்**
**எல்லாத் தீங்கையும் நீங்குவ ரென்பரால்**
**நல்லார் நாமம் நமச்சி வாயவே.**

**கொல்வா ரேனுங்**
கொலைத் தொழிலைச் செய்பவராயினும்
**குணம்பல நன்மைகள் இல்லா ரேனும்**
நற்குணமும் நல்லொழுக்கமும் இல்லாதவராயினும்
**நல்லார் நாமம் நமச்சி வாயவே இயம்புவ ராயிடின்**
நன்மையையே செய்கின்ற சிவபெருமானுடைய நாமமாகிய நமச்சிவாய எனும் ஐந்தெழுத்தை ஓதுவாராயின்
**எல்லாத் தீங்கையும் நீங்குவர்**
தாம் செய்த தீவினைப்பயனால் வரக்கூடி எல்லாத்துன்பங்களிலும் இருந்து நீங்குவர்.

06) **மந்த ரம்மன பாவங்கள் மேவிய**
**பந்த னையவர் தாமும் பகர்வரேல்**
**சிந்தும் வல்வினை செல்வமும் மல்குமால்**
**நந்தி நாமம் நமச்சி வாயவே.**

**மந்த ரம்மன பாவங்கள் மேவிய பந்த னையவர் தாமும்**
மந்தரமலை போன்ற நிலைபெற்ற பாசங்களால் கட்டுண்டவர்கள் தாமும்
**நந்தி நாமம் நமச்சி வாயவே பகர்வராயின்**
சிவபெருமானுடைய நாமமாகிய ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதுவார்களாயின்
**சிந்தும் வல்வினை செல்வமும் மல்குமால்**
தீவினைகள் அகன்று திருவருட் செல்வம் பொலிய வாழ்வார்கள்

07) **நரக மேழ்புக நாடின ராயினும்**
**உரைசெய் வாயினர் ஆயின் உருத்திரர்**
**விரவி யேபுகு வித்திடு மென்பரால்**
**வரதன் நாமம் நமச்சி வாயவே.**

**நரக மேழ்புக நாடின ராயினும்**
தாம்செய்த பாவத்தால் ஏழ்நரகங்களிலும் துன்புறவுள்ளவர்களாய் இருந்தாலும்
**வரதன் நாமம் நமச்சி வாயவே உரைசெய் வாயின்**
வரத்தைத்தரவல்லவரான சிவபெருமானுடைய நாமமாகிய திருவைந் தெழுத்தை ஓதுவார்களாயின்
**உருத்திரர் விரவி யேபுகு வித்திடு மென்ப**
உருத்திர பல்கணத்தாருடன் புகுந்து இன்புற்றிருப்பார்கள்.

08) **இலங்கை மன்னன் எடுத்த அடுக்கல்மேல்**
**தலங்கொள் கால்விரல் சங்கரன் ஊன்றலும்**
**மலங்கி வாய்மொழி செய்தவன் உய்வகை**
**நலங்கொள் நாமம் நமச்சி வாயவே.**

**இலங்கை மன்னன் எடுத்த அடுக்கல்மேல்**
இலங்கை மன்னனாகிய இராவணன் பெயர்த்தெடுக்க முனைந்த திருக்கைலாய மலையின்மேல்
**தலங்கொள் கால்விரல் சங்கரன் ஊன்றலும்**
சுகத்தைச் செய்பவனாகிய சிவபெருமான் தன் கால் விரலை ஊன்றுதலும்
**மலங்கி வாய்மொழி செய்தவன் உய்வகை**
மயக்கமடைந்து தன்நாவால் ஓதியமாத்திரத்தே அத்துன்பத்தினின்றும் உய்தி பெறச் செய்தது.
**நலங்கொள் நாமம் நமச்சி வாயவே**
நன்மையைச் செய்யவல்லதாகிய சிவபெருமானுடைய நாமமாகிய நமச்சிவாய எனும் ஐந்தெழுத்து மந்திரமேயாகும்.

09) **போதன் போதன கண்ணனும் அண்ணல்தன்**
**பாதந் தான்முடி நேடிய பண்பராய்**
**யாதுங் காண்பரி தாகி அலந்தவர்**
**ஓதும் நாமம் நமச்சி வாயவே.**

**போதன் போதன கண்ணனும்**
தாமரை மலரில் இருப்பவனாகிய பிரமனும், தாமரை மலர் போன்ற கண்களையுடைய திருமாலும்
**அண்ணல்தன் பாதந் தான்முடி நேடிய பண்பராய்**
சிவபெருமானுடைய அடியையும் முடியையும் தேடிக்காண முனைந்து

**யாதுங் காண்பரி தாகி அலந்தவர்**
அடிமுடியைக் காணமுடியாதவர்களாக மனக்கவலை அடைந்தவர்களாய்
**ஓதும் நாமம் நமச்சி வாயவே.**
சிவபெருமானுடைய நாமமாகிய ஐந்தெழுத்தை ஓதியே உய்தி பெற்றார்கள்.

10) **கஞ்சி மண்டையர் கையிலுண் கையர்கள்**
**வெஞ்சொல் மிண்டர் விரவில ரென்பரால்**
**விஞ்சை அண்டர்கள் வேண்ட அமுதுசெய்**
**நஞ்சுண் கண்டன் நமச்சி வாயவே.**

**கஞ்சி மண்டையர்**
கஞ்சிகுடிப்பதற்குரிய பாத்திரத்தைக் கைக்கொண்ட புத்தர்களும்
**கையிலுண் கையர்கள்**
கையே பாத்திரமாக உண்ணும் சமணர்களுமாகிய
**வெஞ்சொல் மிண்டர் விரவில ரென்பரால்**
கொடிய பொய் வார்த்தைகளைப் பேசும் மூடர்கள் நிலைபெற மாட்டார்கள்
**விஞ்சை அண்டர்கள் வேண்ட அமுதுசெய்**
வித்தை நிறைந்தவர்களாகிய தேவர்கள் தம்மைக் காக்கும்படி வேண்டுதலும் நஞ்சை அமுதமாக உண்டவராகிய
**நஞ்சுண் கண்டன் நமச்சி வாயவே.**
நஞ்சுண்ட நீலகண்டராகிய சிவபெருமானின் திருநாமம் நமச்சி வாயவே

11) **நந்தி நாமம் நமச்சிவா யவெனுஞ்**
**சந்தை யாற்றமிழ் ஞானசம் பந்தன்சொல்**
**சிந்தை யால்மகிழ்ந் தேத்தவல் லாரெலாம்**
**பந்த பாசம் அறுக்கவல் லார்களே.**

**நந்தி நாமம் நமச்சிவாயவெனும்**
சிவபெருமானுடைய நாமமே நமச்சிவாய என்று
**சந்தை யால்தமிழ் ஞானசம் பந்தன்சொல்**
இசையோடு தமிழ்பாடும் ஞானசம்பந்தன் சொல்லிய .
**சிந்தையால்மகிழ்ந் தேத்தவல் லாரெலாம்**
மனம் மகிழ்ந்து போற்றிப் பாடல்லவரெல்லோரும்
**பந்த பாசம் அறுக்கவல் லார்களே**
மலபந்தங்கள் நீங்கி முத்திப்பேறெய்தப் பெறுவார்களே.

திருச்சிற்றம்பலம்

# சபாபதி நாவலர் வாழ்க்கைக் குறிப்பு

**இடம்** :- யாழ்ப்பாணத்து வடகோவை (கோப்பாய்)

**பெற்றார்** :- சுயம்புநாதபிள்ளை, தெய்வானை.

**பிறப்பு** :- சாலிவாகன சகாப்தம் 1766க்குச் சமனான 1845ஆம் ஆண்டு

**பெற்றார் இட்டபெயர்** :- சபாபதி

**கல்வி**
பிரம்ஸ்ரீ ஜெகத்நாத ஐயரிடம் ஆரம்பக் கல்வி, நீர்வேலி சிவசங்கர பண்டிதரிடம் வடமொழி, தென்மொழி ஆங்கிலம்

**குன்மநோய்**
இளமையிலே குன்ம நோயாளியாகி மனம் துன்புற்று நல்லூர் கந்தசாமி கோயிலில் ஒரு மண்டலகாலம் (48) தவமிருந்து ஒரு நாளிரவு அர்ச்சகர் வந்து கனவில் பாயாசம் கொடுக்கக் கண்டார். அன்றுடன் குன்மம் அகன்றது.

**உபாசனாமூர்த்தி**
நல்லைச் சுப்பிரமணியக் கடவுள் பதிகம் பாடி முருகப் பெருமானை தனது உபாசனாமூர்த்தியாகக் கொண்டார்.

**தலைமைத்தமிழாசிரியர்**
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் விருப்பப்படி சிதம்பரம் சைவப் பிரகாச வித்தியாலயத்தில் சிலகாலம் தலைமைத் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார்.

**அருளுபதேசம்**
திருவாவடுதுறை ஆதீனத்துப் பதினாறாவது மகாசந்நிதானமாக விளங்கிய ஸ்ரீசுப்பிரமணிய தேசிக சுவாமிகளிடம் அருளுபதேசம் பெற்றார்.

12 வருட காலம் அங்கு தங்கியிருந்து ஞானநூல்களைக் கற்று தமிழ் நாட்டிலே பிரசங்கம் செய்தும் நூல்கள் இயற்றியும் நன் மாணாக்கர்க்குக் கற்பித்துவந்தார்.

**விவாகம்**
இவரது நன்மாமனார் சுழிபுரம் க. சரவணமுத்து என்பவரின் புதல்வியைத் திருமணம் செய்தார்.

**நாவலர்பட்டம்**
இவரது சைவப்பிரசங்கப் பிரவாக மகிமைகண்ட திருவாவடுதுறை ஆதீனம் நாவலர் பட்டம் வழங்கிக் கௌரவித்தது. ஆதீன வித்துவானாக இருந்து பணிசெய்தார். மகாசந்நிதானம் இவரைத்

தனது அபிமான புதல்வராக வைத்து உபசரித்தார். இவர் சிவஞான யோகிகள் உபாசகராய் விளங்கினார்.

**திராவிடமாபாடியம் பெற்றது**
துறைசை ஆதீனத்தார் அதிதீவிர பக்குவமுடையார்க்கே படிக்கக் கொடுக்கும் திராவிட மாபாடியத்தை இவருக்குக் கொடுத்தனர். அதனை ஞானநிதியாக வைத்து பூசித்து ஆராய்ச்சி செய்தார்.

**பிரசங்கவன்மை**
தமிழ்நாடெங்கணும் இவரது பிரசங்க வன்மை பேசப்பட்டது. இராமநாதபுரம் ஸ்ரீபாஸ்கர சேதுபதி அவர்கள் இவரை அழைத்துத் தனது சமஸ்தானத்தில் அதி கௌரவம் செய்தார்.

**மடாதிபதிகள் ஆசீர்வாதம்**
மதுரை ஆதீன மடாதிபதியாயிருந்த ஸ்ரீ ஞானசம்பந்த சுவாமிகளும் திருவாவடுதுறை ஆதீன மடாதிபதியாயிருந்த ஸ்ரீசுப்பிரமணிய தேசிக சுவாமிகளும் இவ்வாதீன மடாதிபதியாயிருந்த ஸ்ரீஅம்பலவாண தேசிக சுவாமிகளும் சூரியனார் கோயில் மடாதிபதி ஸ்ரீமுத்துகுமார தேசிக சுவாமிகளும் திருவாய் மொழிகளாலும் ஸ்ரீ முகங்களாலும் பாராட்டி ஆசீர்வதிக்கப் பெற்றார்.

**நூல்கள்**
1) சிதம்பரசபாநாத புராணம்
2) சிவகர்ணாமிர்தம் 1985 வடநூல் மொழிபெயர்ப்பு
3) சதுர்வேத தாற்பரிய சங்கிரகம் வடநூல் மொழிபெயர்ப்பு 1887, 1924
4) பாரத தாற்பரிய சங்கிரகம்
5) இராமாயண தாற்பரிய சங்கிரகம் வடநூல் மொழிபெயர்ப்பு 1884
6) யேசுமத சங்கற்ப நிராகரணம் 1882
7) இலக்கண விளக்கப் பதிப்புரை மறுப்பு
8) வைதிக காவிய தூஷண மறுப்பு
9) ஞான சூடாமணி
10) ஞானாமிர்தம் 1926
11) திருச்சிற்றம்பல யமகவந்தாதி
12) திருவிடைமருதூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி
13) மாவையந்தாதி
14) சிதம்பர பாண்டிய நாயக மும்மணிக் கோவை
15) வடகோவைச் செல்வவிநாயகர் இரட்டைமணிமாலை
16) நல்லை சுப்பிரமணியக் கடவுள் பதிகம்
17) வதிரிநகர்த் தண்டபாணிக் கடவுள் பதிகம்
18) புறவார் பனங்காட்டூர்ப் புறவம்மை பதிகம்
19) சிவஞான யோகிகள் குருபூசை மகோற்சவம்
20) திராவிடப் பிரகாசிகை 1899

**யந்திரசாலை**

சிதம்பரம் செங்கழுநீர்ப்பிள்ளையார் கோயில் வீதியில் ஸ்ரீ பாஸ்கரசேதுபதியின் அனுசரனையுடன் சித்தாந்த வித்தியா நுபாலன யந்திரசாலை நிறுவி பல நூல்களையும், பத்திரிகைகளையும் வெளியிட்டார்.

**பத்திரிகைகள்**

ஞானாமிர்தம், சுதேசவர்த்தமானி (1901)

**மாணாக்கர்கள்**

சிதம்பரம் அ. சோமசுந்தர முதலியார், விழுப்புரம் இராமசாமிப் பிள்ளை, மயிலை க. சிங்காரவேலு முதலியார், மாவை வே. விசுவநாதபிள்ளை, சுழிபுரம் சிவப்பிரகாச பண்டிதர், வதிரி சி. தமோதரம்பிள்ளை முதலாய பலராவர்.

**சிவானந்தப் பெருவாழ்வு**

1903இல் தனது 58ஆவது வயதில் சிவானந்தப் பேறு பெற்றார்.

## திருமந்திர விளக்கம் தொடர்ச்சி
## அட்டாங்க யோகத்தில் இயமம்

சைவப்புலவர் சு. செல்லத்துரை

யோகவழிபாட்டிற்குரிய உறுப்புக்கள் இயமம், நியமம், ஆசனம், பிராணா யாமம், பிரத்தியாகாரம், தாரனை, தியானம், சமாதி எனும் எட்டுமாகும். எட்டு அங்கங்கள் ஆதலால் அட்டாங்கம் எனப்படும். இவற்றுக்கு அடிப்படை யானது இயமம் எனப்படும். இயமம் ஆவது தீயவனவற்றை அதாவது பாவ மான செயல்களைச் செய்யாது விடுதல் ஆகும். இதனைத் தமிழ் மந்திரமா கிய திருமந்திரத்தில் திருமூலர் சுவாமிகள் வரையறுத்துக் கூறுகின்றார்.

யோகவழிபாடு செய்பவர் கொலை, பொய், களவு, கள், காமம், பொறாமை இல்லாதவராயும், நற்குணம், அடக்கம், நடுநிலைமை, பகுத்துண்ணல், நற்சிந்தனை உடையவனாயும் இருத்தல் வேண்டும்.

**கொல்லான் பொய்கூறான் களவிலான் எண்குணன்**
**நல்லான் அடக்கம்உடையான் நடுச்செய்ய**
**வல்லான் பகுத்துண்பான் மாசிலான் கட்காமம்**
**இல்லான் நியமத்திடை நின்றானே** (554)

**கொல்லான்** - ஒரு உயிரையும் கொல்லாதவனும், **பொய்கூறான்** - பொய் சொல்லாதவனும், **களவிலான்** - திருடாதவனும், **எண்குளான்** - ஆராய்ச்சி உடையவனும், **நல்லான்** - நல்லவனும், **அடக்கமுடையான்** - பணிவுடை யவனும், **நடுசெய்யவல்லான்** - நீதி செய்ய வல்லவனும், **பகுந்துண்பான்** - பகிர்ந்து கொடுத்து உண்பவனும், **மாசிலான்** - குற்றம் இல்லாதவனும், **கட்காமம் இல்லான்** - கள்ளும் காமமும் இல்லாதவனும்.

ஆகிய தூய்மையானவனே இயம ஒழுக்கங்களில் நிற்பவனாவான். பூரணசத்துள்ள பாலுணவு கூட அழுக்கற்ற தூய பாத்திரத்தில் வைத்தால் தான் பழுதுறாது பயன்தரும். அதேபோல யோகத்தில் ஈடுபடுபவரும் அகமும் புறமும் தூயவராயிருத்தல் வேண்டும். அப்போதுதான் யோகம் சித்திபெறும்.

# நினைவில் கொள்வதற்குரிய வழிபாட்டு நாட்கள்

ஜய ஆடி

| | | | |
|---|---|---|---|
| 01 | 17.07.2014 | வியாழன் | ஆடிப்பிறப்பு |
| 05 | 21.07.2014 | திங்கள் | மூர்த்தி நாயனார், புகழ்ச்சோழர் குருபூசை, கார்த்திகை விரதம் |
| 06 | 22.07.2014 | செவ்வாய் | ஏகாதசி விரதம், ஆடிச்செவ்வாய். |
| 08 | 24.07.2014 | வியாழன் | பிரதோஷ விரதம் |
| 09 | 25.07.2014 | வெள்ளி | கூற்றுவ நாயனார் குருபூசை |
| 10 | 26.07.2014 | சனி | ஆடி அமாவாசை |
| 13 | 29.07.2014 | செவ்வாய் | ஆடிச் செவ்வாய் |
| 14 | 30.07.2014 | புதன் | நாகசதுர்த்தி, ஆடிப்பூரம் |
| 16 | 01.08.2014 | வெள்ளி | சஷ்டி விரதம் |
| 17 | 02.08.2014 | சனி | பெருமிழலைக்குறும்பர் குருபூசை |
| 18 | 03.08.2014 | ஞாயிறு | சுந்தரர், சேரமான்பெருமாள் குருபூசை |
| 20 | 05.08.2014 | செவ்வாய் | ஆடிச் செவ்வாய் |
| 21 | 06.08.2014 | புதன் | கலியர், கோட்புலியார் குருபூசை |
| 22 | 07.08.2014 | வியாழன் | ஏகாதசி விரதம் |
| 23 | 08.08.2014 | வெள்ளி | பிரதோச விரதம், வரலட்சுமி விரதம் |
| 25 | 10.08.2014 | ஞாயிறு | பூரணை |
| 27 | 12.08.2014 | செவ்வாய் | ஆடிச் செவ்வாய் |
| 29 | 14.08.2014 | வியாழன் | சங்கடகர சதுர்த்தி |

ஜய ஆவணி

| | | | |
|---|---|---|---|
| 01 | 17.08.2014 | ஞாயிறு | ஆவணி மாதப்பிறப்பு, கார்த்திகை விரதம், ஆவணி ஞாயிறு |
| 05 | 21.08.2014 | வியாழன் | ஏகாதசி |
| 06 | 22.08.2014 | வெள்ளி | பிரதோஷ விரதம் |
| 07 | 23.08.2014 | சனி | செருத்துணையார், நீலகண்டர் குருபூசை |
| 08 | 24.08.2014 | ஞாயிறு | புகழ்த்துணையார், அதிபத்தர் குருபூசை |
| 09 | 25.08.2014 | திங்கள் | இளையான்குடிமாற நாயனார் குருபூசை, அமாவாசை |
| 11 | 27.08.2014 | புதன் | மறைஞானசம்பந்தர் குருபூசை |
| 13 | 29.08.2014 | வெள்ளி | விநாயக சதுர்த்தி |
| 15 | 31.08.2014 | ஞாயிறு | ஷஷ்டி விரதம் |
| 17 | 02.09.2014 | செவ்வாய் | குலச்சிறையார் குருபூசை |
| 18 | 03.09.2014 | புதன் | குங்கிலியக்கலைய நாயனார் குருபூசை |
| 20 | 05.09.2014 | வெள்ளி | பரிவர்த்தன ஏகாதசி |
| 21 | 06.09.2014 | சனி | ஆவணி ஓணம் |
| 23 | 08.09.2014 | திங்கள் | பூரணை விரதம், உமாமகேச விரதம் |
| 24 | 09.09.2014 | செவ்வாய் | மகாளயபட்சாரம்பம் |
| 27 | 12.09.2014 | வெள்ளி | சங்கடகரசதுர்த்தி |
| 28 | 13.09.2014 | சனி | மகாபரணி |
| 29 | 14.09.2014 | ஞாயிறு | கார்த்திகை விரதம், கபில சஷ்டி |

ஜய புரட்டாதி

| | | | |
|---|---|---|---|
| 01 | 17.09.2014 | புதன் | மாதப்பிறப்பு |
| 03 | 19.09.2014 | வெள்ளி | ஏகாதசி விரதம் |
| 04 | 20.09.2014 | சனி | புரட்டாதி சனி |
| 05 | 21.09.2014 | ஞாயிறு | பிரதோச விரதம் |
| 06 | 22.09.2014 | திங்கள் | கேதாரேஸ்வரர் விரதம் |
| 07 | 23.09.2014 | செவ்வாய் | அருணந்திசிவாசாரியார் குருபூசை, அமாவாசை விரதம், மகாளய முடிவு |
| 08 | 24.09.2014 | புதன் | நவராத்திரியாரம்பம் |
| 12 | 28.09.2014 | ஞாயிறு | சதுர்த்தி விரதம் |
| 13 | 29.09.2014 | திங்கள் | ஷஷ்டி விரதம் |
| 16 | 02.10.2014 | வியாழன் | சரஸ்வதி பூசை |
| 17 | 03.10.2014 | வெள்ளி | ஏனாதிநாயனார் குருபூசை, விஜயதசமி, கேதாரகௌரி விரதாரம்பம் |
| 18 | 04.10.2014 | சனி | ஏகாதசி |
| 20 | 06.10.2014 | திங்கள் | நரசிங்கமுனையார் குருபூசை, பிரதோச விரதம் |
| 21 | 07.10.2014 | செவ்வாய் | நடேசரபிசேகம் |
| 22 | 08.10.2014 | புதன் | பூரணை |
| 23 | 09.10.2014 | வியாழன் | உருத்திரபசுபதி நாயனார் குருபூசை |
| 25 | 11.10.2014 | சனி | சங்கடகர சதுர்த்தி, கார்த்திகை விரதம் |
| 26 | 12.10.2014 | ஞாயிறு | திருநாளைப்போவார் குருபூசை |

# சைவப்புலவர் தேர்வு முடிவுகள் - 2014

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தால் 2014 சித்திரையில் நடத்தப்பட்ட சைவப்புலவர், இளஞ்சைவப்புலவர் தேர்வுகளின் பெறுபேறுகள் வெளிவந்துள்ளன. சித்தியடைந்தவர்களின் விபரம் வருமாறு.

**சைவப்புலவர் தேர்வில் சித்தியடைந்தோர்**

01) திரு. வல்லிபுரம் தயாபரசிவம்
வைகுந்தவாசா, வட்டு வடக்கு, வட்டுக்கோட்டை.
02) திரு. நாகன் தவராசா
ஆலடி வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
03) திரு. சிதம்பரம் சிவானந்தராசா
236, செட்டியார் தெரு, கொழும்பு 11.
04) திரு. சாமித்தம்பி பொன்னுத்துரை
42, 3/3, உருத்திரா மாவத்தை, கொழும்பு 06.
05) திரு. கந்தையா பத்மானந்தன்
14, அத்தபத்து ரெறஸ், தெகிவளை.

**இளஞ்சைவப்புலவர் தேர்வில் சித்தியடைந்தோர்**

01) திரு. தர்மராசா உதயசங்கர்
32, ஸ்பெல்வின் வீதி, உவர்மலை, திருகோணமலை.
02) திரு. மருதப்பு முருகேசு
320, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
03) திரு. தனஞ்செயன் அருச்சுனன்
விநாயகபுரம், வாழைச்சேனை.
04) திருமதி. கணேசலிங்கம் நாகபூஷணி
BG4, வேலுவனராம தொடர்மாடி, கொழும்பு 06.
05) திரு. கோபாலபிள்ளை திலக்ஷன்
மண்டபத்தடி கோவில் வீதி, மகிழூர்முனை, களுவாஞ்சிக்குடி.
06) திரு. கணேசமூர்த்தி ரவீந்திரன்
பாடசாலை வீதி, வம்மிவட்டுவான், கதிரவெளி.
07) செல்வி. தர்மராசா தர்சினி
பாடசாலை வீதி, கல்மடு, கல்குடா.
08) செல்வி. தங்கலீலா கந்தசாமி
கரவெட்டி தெற்கு, கரவெட்டி.

மேற்படி தேர்வுகளுக்குத் தோற்றியவர்களுக்குரிய பெறுபேறுகள் அவரவர் முகவரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. சைவப்புலவர் தேர்வில் சித்தியடைந்தவர்கள் அவரவர்க்கு கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளில் ஆகஸ்ட் 15ஆம் திகதிக்கு முன்னர் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பிக்க வேண்டும். தகவல்களுக்கு 0777497100 எனும் இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும். எனச் சைவப்புலவர் சங்கச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சைவநீதி முத்திங்கள் சஞ்சிகையின் பதினேழாவது ஆண்டு மலர் அறிமுக விழா



திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்த பயிற்சி மையம்
கொழும்பு, அங்கத்தினர் போயா தினங்களில் (பூரணை) நந்தீஸ்வரர் ஆலயத்தில்
அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல், மகேசுவர பூசை நிகழ்வுகளில் ஈடுபடுகின்றனர்.



Registered in the Department of Posts of Sri Lanka under No. QD/167/News/2014
இவ்விதழ் திருவாவடுதுறை ஆதீன கொழும்பு சைவசித்தாந்தப் பயிற்சி மையத்தினரால்
Sharp Graphics (Pvt) Ltd. அச்சிட்டு வெளியிடப்பட்டது.